நேரு குழந்தைகள் புத்தகாலயம்

பிரேம்சந்த்

அம்ரித் ராய்

தமிழாக்கம் :
ஆர். சூடாமணி

சித்திரங்கள் :
எஸ். பானர்ஜி

nbt.india
एकः सूते सकलम्

nbt.india
एकः सूते सकलम्

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

ISBN 978-81-237-9102-9

முதற்பதிப்பு 1985
மறுபதிப்பு 2020 (சக 1940)

© அம்ரித் ராய், 1977
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

Premchand (*Hindi original*)
Premchandh (*Tamil*)

₹ 35.00

வெளியீடு: இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
நேரு பவன், 5 இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, ஃபேஸ்-II
வஸந்த் குஞ்ச், புதுதில்லி – 110070
Website: www.nbtindia.gov.in

1

சந்திரஹாஸன் என்னும் இளைஞன் பிரேம்சந்தைச் சந்திப்பதற்காகக் கேரளத்திலிருந்து வெகுதூரம் பயணம் செய்து காசிக்கு வந்திருக்கிறான். அங்கும் இங்கும் சுற்றியலைந்த பின் கடைசியில் ஒருவாறு எழுத்தாளரின் இல்லத்தை அடைகிறான். தான் வந்திருப்பதை உணர்த்தும் வகையில் அவன் எழுப்பும் ஒலிகள் எதற்குமே பதில் வரவில்லை. ஆகவே, அருகிலுள்ள கதவை நெருங்கி, சற்று அச்சத்துடன் அறைக்குள் எட்டிப் பார்க்கிறான். அங்கு நீண்டு அடர்ந்த மீசையோடு ஒரு மனிதர் தரையில் சிறு சாய்வு மேஜையருகில் உட்கார்ந்து மும்முரமாக எழுதிக் கொண்டிருக்கிறார். அறை வெறிச் சென்றிருக்கிறது. அம்மனிதரின் தோற்றமும் மிகச் சாதாரணமானதே. அவர் அந்த எழுத்தாளரின் குமாஸ்தாவாகத்தான் இருக்க வேண்டும் என்று இளைஞன் தீர்மானிக்கிறான். முன்னால் வந்து “நான் முன்ஷி பிரேம்சந்த் அவர்களைப் பார்க்க விரும்புகிறேன்” என்கிறான்.

பிரேம்சந்த் தலைநிமிர்கிறார். சற்றே திகைக்கிறார். பிறகு பேனாவை வைத்துவிட்டு, உரக்கச் சிரித்தவாறே, “ஆகா, அப்படியா! ஆனால் முதலில் இப்படி வந்து உட்காருங்களேன்!” என்கிறார்.

நாஷாத் என்னும் இளம் உருதுக் கவிஞன் லக்னோவில் பிரேம்சந்தை முதன்முதலாகப் பார்க்கச் செல்கிறான். அவர் வீடு எங்கிருக்கிறதென்று அவனுக்கு உத்தேசமாகத்தான் தெரியும். நிச்சயமில்லை. ஆகவே தெருவில் போகும் ஒருவரிடம் “தாங்கள் தயவுசெய்து முன்ஷி பிரேம்சந்த் அவர்களின் வீட்டுக்கு வழி சொல்ல முடியுமா?” என்று கேட்கிறான்.

வெறும் உள் அங்கியும் அழுக்கேறிய வேட்டியும் உடுத்துச் சற்று அலங்கோலமாய்க் காணப்படும் அம்மனிதர் “தாராளமாய்ச் சொல்கிறேன்” என்று கூறி முன்னே நடக்க, இளம் கவிஞன் பின் தொடர்கிறான். இருவரும் வீட்டை அடைகிறார்கள். படியேறி மாடிக்குச் சென்று, ஏறக்குறைய காலியாக இருக்கும் ஓர் அறைக்குள் நுழைகிறார்கள். அந்த மனிதர் நாஷாத்திடம் சற்றுக் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு வீட்டின் உட்புறம் செல்கிறார். விரைவில் உள் அங்கியின் மேல் ஒரு ‘குர்த்தா’(ஜிப்பா)வை மாட்டிக்கொண்டு வெளியே வருகிறார்.

“இப்போது நீங்கள் முன்ஷி பிரேம்சந்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்” என்று குறும்புச் சிரிப்புடன் சொல்கிறார்.

ஏப்ரல் 1934. தில்லியில் ஹிந்தி எழுத்தாளர்கள் மாநாடு ஒன்று

nbt.india
एक: सूत्रे सर्वे भवन्तु

கூடியிருக்கிறது. பிரேம்சந்த் அதில் புனைவிலக்கியப் பிரிவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இப்போது புகழேணியின் உச்சியில் இருந்தபோதிலும் நிர்வாகிகளிடம் ஏதும் தனிச்சலுகைகள் கோரவில்லை. பிரசித்தி பெற்ற ஹிந்தி நாவலாசிரியர் ஜைனேந்திர குமார் அவரைப் பற்றி "அவர் மற்றவர்களோடு சேர்ந்து பொதுப் படுக்கைக் கூடத்தில் படுத்துக்கொண்டு எல்லாரைப் போலத்தான் வந்து தங்கியிருந்தார்" என்று கூறுகிறார். அந்த இடம் ஆஸ்பத்திரியின் பொது 'வார்டு' போல் காட்சியளிக்கிறது. ஆனால் பிரேம்சந்த் பொருட்படுத்தவில்லை. அவருக்கு அதுவே பிடித்திருக்கிறது. உணவு நேரத்தில் அவர் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று சாப்பாடு போடச் சொல்கிறார். ஊழியர் அவரிடம் உணவுச்சீட்டைக் கேட்கிறார்.

"டிக்கெட்டா? எங்கே கிடைக்கும்?"

"விலைக்கு வாங்குவதாயிருந்தால் அதோ அந்த ஜன்னலில் கிடைக்கும். இல்லாவிட்டால் ஆபீஸில்" என்கிறார், தாம் யாரோடு பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறியாத அந்த ஊழியர்.

மறுபேச்சின்றி பிரேம்சந்த் சென்று 'கியூ' வரிசையில் நின்று ஜன்னலிலிருந்து சீட்டு வாங்கிக் கொள்கிறார்.

இந்த எளிமை அவர் குணத்துக்கே அடிப்படையானது.

இப்போது இடம் லாகூர். ஆண்டு 1935. புகழ்பெற்ற உருது நாடகாசிரியர் இம்தியாஜ் அலி தாஜ் அவரைத் தேநீர் அருந்த அழைத்திருக்கிறார். தாம் வருவதாகவும், ஆனால் அதற்கு முன் தமக்குத் தலைக்கு மேல் வேலை இருப்பதாகவும் பிரேம்சந்த் கூறுகிறார். நாளெல்லாம் லாகூர் தெருக்களில் வேலையாய் அலைந்துவிட்டு நாள் முடிவில் அவர் களைத்த முகத்துடன், கசங்கிய வேட்டியும் முரட்டுத் துணியில் 'குர்த்தா'வும் அணிந்த கோலத்தில் ஆசிரியரின் வீட்டை அடையும்போது அங்கு ஒன்றையொன்று விஞ்சுவதாய் நூற்றுக்கணக்கான கார்கள் நிற்கின்றன. நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், பேராசிரியர்களுமாய்க் கூடியிருக்கிறார்கள். நகரின் பெரிய மனிதர்கள் அனைவருமே அங்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஊர்ப் பிரமுகர்களில் பலரும் யாருக்காகக் காத்திருந்தார்களோ அவர்தான் இப்படிக் கலைந்த தோற்றத்துடன் ஓர் எளிய கிராமத்தான் போல் காணப்படும் இந்த வேடிக்கையான ஆசாமி என்பதை உணரும்போது பிரேம்சந்தை அதிகம் அறியாதவர்களின் அதிர்ச்சி நீங்க சிறிது நேரம் பிடிக்கிறது.

nbt.india एकः सूते सकलम्

இவைபோல் எத்தனையோ கதைகள். அவை யாவும் இந்த மனிதரின் பரிபூரண எளிமை ஒன்றையே எடுத்துக் காட்டுகின்றன. அவரிடம் போலியாக எதுவுமே இல்லை. தாம் உள்ளபடியே இயற்கையாய் இருக்கிறார். அவர் வெறுப்பது செயற்கைத்தனம் ஒன்றைத்தான்.



பிரேம்சந்த் - 1907

nbt.india
एकः सूते सकलम्

2

“என் வாழ்க்கை ஒரு சமவெளி. அங்கங்கு சிறு குழிகள் இருக்கும். ஆனால் செங்குத்தான பாறைகளோ மலைகளோ காடுகளோ பள்ளத் தாக்குகளோ சிதிலங்களோ ஏதும் கிடையாது. மலையேற விரும்புவோருக்கு இங்கு நிச்சயம் ஏமாற்றம்தான்!”

“நான் 1880ஆம் ஆண்டு ஜுலை 31ஆம் தேதி காசியிலிருந்து நான்கு மைல் தள்ளியிருக்கும் லமாஹி என்ற கிராமத்தில் பிறந்தேன். என் தந்தை ஒரு தபால்துறை ஊழியர். என் தாய் ஒரு சீக்காளி. எனக்கு ஓர் அக்காவும் இருந்தாள். நான் பிறந்தபோது என் தந்தையின் மாத வருமானம் சுமார் இருபது ரூபாய். அவர் இறக்கும்போது ஊதியம் நாற்பது ரூபாய். என் தந்தை யோசனை மிக்கவர். கண்களை நன்கு திறந்து கொண்டுதான் வாழ்ந்தார். ஆனால் தம் இறுதி நாட்களில் இடறி விழுந்துவிட்டார். என்னையும் தம்மோடு சேர்த்து வீழ்த்திவிட்டார். எனக்குப் பதினைந்து வயதானபோது என் திருமணத்தை நடத்தினார். பின் ஓர் ஆண்டு ஆவதற்குள் இறந்தும் போனார்.”

பிரேம்சந்த் அந்த நாட்களை மிகவும் இருள் சூழ்ந்ததாய்த் தோன்றச்செய்கிறார். அப்போது நிலைமை துன்பமானதென்பது உண்மையே. ஆனால் இருள் சூழ்ந்ததென்று நான் நினைக்கவில்லை. குழந்தைப் பருவத்தில் வாழ்க்கையில் எதுவுமே இருண்டதாகத் தோன்றாது. அந்தப் பருவத்தில் ஒருவித மாயாஜாலம் யாவையும் உருமாற்றி விடுகிறது. இந்த மாயத்தைக் குழந்தை பிற்காலத்தில் பெரியவனான பிறகு நினைவில் இருத்திப் பார்க்கும்போது புரிந்துகொள்கிறான். அதற்குள் அந்த மாயமும் எல்லா மாயத்தைப் போலவே மறைந்தும் போய்விடுகிறது. ஆனால் எந்த மாயாஜாலமும் ஒன்றும் செய்ய முடியாத ஒரு துயரம் அவருக்கு நேர்ந்தது. அதுதான் அவர் தாயின் மரணம். அவருக்கு அப்போது எட்டே வயதுதான். அந்தத் துயரம் அவர் இதயத்துள்

ஆழத் துளைத்து வாழ்நாள் முழுவதும் நீங்காத ஒரு காயமாகியது. அவர் தந்தை மறுமணம் செய்து கொண்டார். ஒரு மாற்றாந்தாய் வந்ததில் அவர் மகிழ்ச்சியும் பெருகவில்லை. அவர் துயரமும் குறையவில்லை. ஆனால் எந்தச் சிறுவனும் நீடித்துத் துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பதில்லையே! ‘நவாப்’ அல்லது ‘தன்பத்’ என்ற அந்தச் சிறுவனும் அவ்வாறு செய்யவில்லை. (பிரேம்சந்த் என்பது நெடுநாட்களுக்குப் பின் அவர் தரித்துக்கொண்ட புனைப்பெயராகும். அவருடைய இயற்பெயர் தன்பத் ராய்.).

அவருடைய தாய் இறந்தபிறகு, அண்மையிலிருந்த கிராமம் ஒன்றில் ஒரு மௌல்வியிடம் (முகம்மதிய அறிஞர்) கல்வி கற்கச் சேர்க்கப்பட்டார்.

லமாஹி - பிறந்த ஊர்

அக்காலத்தில் காயஸ்தர் சாதிப் பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்ட கல்வி பெரும்பாலும் பாரசீக மொழியும் உருதுவும் பயில்வதுதான். பள்ளி ஒரு வகையில் அனுபவிக்கக்கூடியதாய்த்தான் இருந்தது. அந்த மௌல்வி உண்மையில் ஒரு தையற்காரரர். தையல் தொழிலோடு கூட, தமக்குக் கிடைத்த ஒரு சில மாணவர்களுக்காக 'மதரஸா'வும் (பள்ளிக்கூடம்) நடத்திவந்தார். பள்ளியில் வருகைப் பதிவேடு கிடையாது. வகுப்புக்கு யார் வந்தார்கள், யார் வரவில்லை என்பது பற்றி மௌல்வியார் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அவருடைய சம்பளம் கணக்காக வந்துவிடவேண்டும். பையன்கள் அவர் வீட்டில் சிறு பணிவிடைகள் செய்துகொண்டும், அவர் ஏவிய வேலைகளைச் செய்தும் அவரைத் திருப்திப்படுத்த வேண்டும். இவை போதும் அவருக்கு. எனவே நவாப் அடிக்கடி மட்டம் போட்டுவிட்டு (மறுநாள் காலை அதற்கு ஏதாவது நல்ல கற்பனைக் காரணம் தயார்!) சுவையான வழிகளில் பொழுது போக்க ஓடிவிடுவான். இதை அவர் தமது சுயசரிதைப் போக்கான 'திருட்டு' என்ற சிறுகதையில் பின்னால் இவ்வாறு வர்ணிக்கிறார்:

"சில சமயம் நாங்கள் காவல் நிலையத்தின் முன் நின்று போலீஸ்காரரர்களின் அணிவகுப்பை வேடிக்கை பார்ப்போம். சிலசமயம் எவனாவது குரங்காட்டி அல்லது கரடியாட்டியின் பின்னாலேயே நாளெல்லாம் போய்க் கொண்டிருப்போம். சிலசமயம் புகைவண்டி நிலையத்துக்குச் சென்று எங்கள் அருமை ரயில்கள் போவதையும் வருவதையும் பார்த்துக்கொண்டு நிற்போம். பள்ளியின் பாட அட்டவணையை விட எங்களுக்கு ரயில்களின் கால அட்டவணை மிக நன்றாகத் தெரியுமென்று சொல்லலாம்!"

இதைத் தவிர, கிராமச் சிறுவர்களின் வழக்கமான விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும் இருந்தன. கோலி ஆட்டம், கிட்டிப்புள். நவாப் கிட்டிப்புள் ஆடுவதில் மிகவும் சமர்த்தன். கிராமக் குளங்களில் மீன் பிடித்து வந்து வறுப்பது, கரும்புக் காலத்தில் தோட்டங்களிலிருந்து கரும்பு எடுப்பது, மாமரத்தில் கல் எறிந்து மாங்காய் அடிப்பது. நவாப் மிக நன்றாய்க் குறி பார்த்து அடிப்பவனென்று பெயரெடுத்தவன். இதுபோல் செலவில்லாத கேளிக்கைகள் இன்னும் எத்தனையோ! எல்லாமே நல்ல வேடிக்கைதான் – யாரிடமிருந்து திருடுகிறோமோ அவர்களிடம் வசவு வாங்கிக் கட்டிக்கொள்வதுகூட!

வீட்டுக்குள் முடங்கிக் கிடக்காமல் பெரும்பாலும் வெளியிலேயே இருக்க முடிவது நவாபைப் பொறுத்த வரையில் இன்னும் நிம்மதி தரும்

nbt.india एकः सूते सकलम्

விஷயம். தாயோ உயிரோடு இல்லை. தபாலாபீஸ் அலுவல்களில் மூழ்கியிருக்கும் தந்தை. சள்ளென்று விழும் மாற்றாந்தாய். இந்நிலையில் வீட்டில் அவனுக்கு ஏதும் கவர்ச்சி இல்லை. சில மாதங்களுக்கு ஒருமுறை பண்டா, பஸ்தி, அஜம்கட், கோரக்பூர், கான்பூர், லக்னோ போன்ற இடங்களுக்கெல்லாம் தந்தைக்கு பணி மாற்றலாவதை அவன் ஆவலாக எதிர்பார்த்தான். பயணம் செய்வதே சொர்க்கமாயிருந்தது. அவன் உற்சாகத்துக்கு எல்லையே இருக்காது. புது இடத்தைப் பார்க்கும் உற்சாகம் ஒருபுறமிருக்க, கிராமத்தில் இருப்பதைவிட இங்கெல்லாம் அப்பா சற்று அதிகப் பரிவுடன் நடந்து கொள்வார். திட்டுவதற்குச் சின்னம்மாவும் இருக்க மாட்டாள். அனேகமாய் அவள் ஊரிலேயே தங்கிவிடுவாள். இந்த அனுபவத்தையெல்லாம் நவாப் அடிமனத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்து பின்னால் தம் எழுத்துக்களில் பயன்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. உதாரணமாக 'கஜாகி' என்ற சுயசரிதைக் கதையில் (இதில் கஜாகி ஒரு தபால் சேவகன்) பிரேம்சந்த் தம் தந்தையைப் பற்றிச் சொல்கிறார்:

"அப்பாவுக்குச் சட்டென்று கோபம் வந்துவிடும். அவர் மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இது அவரை அப்படி எரிந்து விழச்செய்தது. நான் அவரிடமிருந்து ஒதுங்கியே இருந்தேன். அவரும் என்னிடம் அதிக அன்பு காட்டவில்லை. சாப்பாட்டுக்காக அவர் இரண்டே முறை ஒவ்வொரு மணி நேரம் வீட்டுக்குள் வருவார். மற்ற நேரமெல்லாம் தம் ஆபீசில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருப்பார். எத்தனையோ முறை தம் மேலதிகாரிகளிடம் உதவிக்கு ஓர் ஆள் வேண்டுமென்று அவர் கேட்டிருந்தும் பயனில்லை".

தந்தைக்கும் மகனுக்குமிடையே அதிக நெருக்கம் இல்லை என்பது நன்றாய்த் தெரிகிறது. தாய் இறந்த பிறகு ஓரளவு தாயின் கனிவை அவனுக்குக் காட்டியது அவன் அக்காதான். ஆனால் அவளும் திருமணமாகிச் சென்றுவிட்டாள். இதனால் விளைந்தது தனிமை; சரியான கவனிப்பில்லாத ஒருவித முரட்டுத்தனமான வளர்ச்சி. அடுத்தது தறுதலையாகத் திரிய வேண்டியதுதான். அவனும் ஏறக்குறைய அந்த நிலைக்கு வந்துவிட்டான். பன்னிரண்டு வயதுக்குள் புகை பிடிக்கவும், "அந்தப் பிஞ்சு வயதில் ஒரு சிறுவனுக்கு நல்லதல்லாத வேறு பல விஷயங்களும்" கற்றுக்கொண்டான். தம் இளமைக் காலத்தைப் பற்றிப் பேசும்போது பிரேம்சந்தே இவ்வாறு சொல்கிறார். ஆனால் இயற்கைதான் நினைப்பவர்களை எப்படியோ கேடு சூழாமல்

nbt.india
एक: सूते सकलम्

காப்பாற்றிவிடுகிறது. நவாப் தன் தந்தையுடன் கோரக்பூரில் இருந்தபோது புத்திலால் என்ற புத்தக வியாபாரியை அதிருஷ்டவசமாகச் சந்தித்தான்.

"எனக்கு அப்போது சுமார் பதின்மூன்று வயது. ஹிந்தி தெரியாது. உருது நாவல்களென்றால் பைத்தியம். மௌலானா ஷரார், பண்டிட் ரதன்நாத் ஸர்ஷார், மிர்ஜா ருஸ்வா, ஹார்தோயியைச் சேர்ந்த மௌல்வி முகம்மது அலி ஆகியோர் மிகப் பிரபலமான நாவலாசிரியர்கள். அவர்கள் நூல்களில் ஏதாவதொன்று கிடைத்துவிட்டால் போதும். நான் பள்ளியையெல்லாம் மறந்து அதைப் படித்து முடித்துவிட்டுத்தான் ஓய்வேன். ரெய்னால்டின் நாவல்கள் அந்நாளில் கொடிகட்டிப் பறந்தன. அவர் நூல்களின் உருது மொழிபெயர்ப்புகள் எத்தனையோ வெளிவந்து கண் மூடித் திறப்பதற்குள் விற்றுப்போயின. எனக்கு அவையும் உயிர்தான்... ரதன்நாத் ஸர்ஷார் எழுத்தை எத்தனை படித்தாலும் எனக்கு அலுக்காது. நான் புத்திலால் கடைக்குப் போய் புத்தகக் குவியலிலிருந்து நாவல்களை எடுத்துப் படிப்பேன். ஆனால் நாளெல்லாம் கடையில் உட்கார்ந்திருப்பது சாத்தியமில்லை. எனவே நான் ஆங்கிலப் புத்தகங்களின் விளக்க உரைநூல்களை எடுத்துப் போய்ப் பள்ளியிலிருந்த பையன்களுக்கு விற்றுவிட்டு அதற்குச் சலுகையாய் நாவல்களை வீட்டுக்கு எடுத்துப் போவேன். அந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் நான் நூற்றுக்கணக்கான நாவல்கள் படித்திருப்பேன். நாவல்களை முடித்தபிறகு நான் புராணங்களின் உருது மொழிபெயர்ப்புகளையும் (நவல் கிஷோர் ப்ரெஸ் வெளியிட்டது) 'திலஸ்ம்-ஏ-ஹோஷ்ரூபா'வின் பல பாகங்களையும் படித்தேன். மர்மங்களையும் அற்புதங்களையும் சொல்லும் இந்தப் பிரம்மாண்டமான நூலின் பதினேழு பாகங்கள் அதுவரை வெளியாகியிருந்தன. ஒவ்வொரு பாகத்திலும் பெரிய அளவுப் பக்கங்களில் இரண்டாயிரம் பக்கங்களுக்குக் குறைவில்லை. இந்தப் பதினேழு பாகங்களைத் தவிர அந்த நூலின் தனித்தனி நிகழ்ச்சிகளைக் குறித்துப் பற்பல புத்தகங்கள் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றையும் படித்துத் தீர்த்தேன். இந்த நூலாசிரியரின் மகத்தான கற்பனைத்திறனை எண்ணி நம்மால் பிரமிக்கத்தான் முடியும். மௌலானா ஃபைஜீ இக்கதைகளை அக்பருக்காகப் பாரசீக மொழியில் எழுதினார் என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் அனேகமாய் உலகின் எந்த மொழியிலுமே இத்தகைய ஒரு மாபெரும் கதைப் புத்தகம் கிடையாது என்பதில் ஐயமில்லை. அது ஒரு கலைக்களஞ்சியம்தான். அதுபோன்ற ஒரு நூலை எழுதுவது

கிடக்கட்டும், வெறும் நகல் எடுப்பதுகூட ஒரு மனிதனின் அறுபதாண்டு ஆயுட்காலத்தில் இயலாத காரியமென்றே சொல்லிவிடலாம்!"

ஒரு கதையை சுவாரஸ்யம் குன்றாமல் மனசை இழுத்துப் பிடிக்கும் வகையில் அமைப்பதே பிரேம்சந்தின் எழுத்து வலிமை என்பது தெரிந்த விஷயம். அதன் ரகசியம் இதுதான். பதின்மூன்றிலிருந்து பதினைந்து வயது வரை அவர் படித்த இந்தத் தொடக்க காலப்படிப்பு ஒரு கதாசிரியராக அவருக்கிருந்த அபூர்வ திறமைக்கு அஸ்திவாரம் இட்டது. இதுவும் அந்தச் சிறுவனுக்குள் அப்போது கண்விழிக்கத் தொடங்கியிருந்த படைப்புத் தாகமும் சேர்ந்து, தனிமையாலும், மனம் போனபடி திரியும் போக்கினாலும் விளைய இருந்த கேட்டிலிருந்து அவனைக் காப்பாற்றின. புத்தகங்கள் இந்த இரு குறைபாடுகளுக்குமே மருந்தாயின. அவை அவன் தனிமையை நிறைவித்தன. அவனுடைய தன்னிச்சையான போக்குக்கு மட்டுமின்றி, வினோதக் கற்பனைகளிலும் புதுப்புது அனுபவங்களிலும் அவனுக்கிருந்த ஆர்வத்துக்கும் ஒரு வடிகாலாயின.

நவாப் தன் முதல் படைப்பாகிய ஒரு சிறு நாடகத்தை எழுதியது இந்தக் காலத்தில்தான். அந்த நாடகம் ஒரு சிறுவனின் பழிக்குப் பழிச் செயலாக அமைந்திருந்தது. தன்னை மிகவும் பரிகசித்துத் துன்புறுத்திய ஒரு தூரத்து உறவினரை அதில் அவன் எள்ளி நகையாடியிருந்தான். அம்மனிதர் ஒரு பெண் பித்தர். அதன் விளைவாக வம்பில் மாட்டிக் கொண்டுவிட்டார். பச்சையாய்க் கேலி செய்யச் சரியான சந்தர்ப்பம்! சிறுவன் அந்தப் போக்கிரியைப் போனால் போகிறதென்று விடவில்லை. முழு மூச்சுடன் சாடினான். ஆனால் துரதிருஷ்டவசமாக அச்சிறு நாடகம் அச்சில் வரவே இல்லை. கூச்சமடைந்த அந்த அபாக்கியசாலி மனிதர் ஓடிப் போவதற்கு முன் ஒருவேளை அதை அழித்திருக்கலாம். இது எப்படியாயினும் நம் இளம் எழுத்தாளன் அப்போதுதான் பேனாவின் சக்தியை முதல் முதலாக உணர்ந்து கொண்டிருக்கவேண்டும்.

அவன் வாழ்க்கை பெரும்பாலான வாழ்க்கைகளைப் போல் சுவையற்று இயங்கிக் கொண்டிருந்தது. பதினைந்தாம் வயதில் அவன் திருமணம் நடைபெற்ற போது முதலில் அது கிளர்ச்சியூட்டுவதாக இருந்தாலும் போகப்போக ஒரு பயங்கரக் கனவு போல் ஆகிவிட்டது. மிக இளமையில் நடந்துவிட்ட திருமணம் என்பதோடு, கணவன் மனைவியரிடையே ஜோடிப் பொருத்தம் சற்றும் இல்லாமலிருந்ததே இதற்குக் காரணம். அடுத்த ஆண்டு அவன் தந்தை காலமானார். பிரேம்சந்த ஒரு சிறு சுயசரிதைக் கட்டுரையில் கூறுகிறார்:

nbt.india एकः सूते सकलम्

“அப்போது நான் ஒன்பதாம் வகுப்பு மாணவன். வீட்டில் என் மனைவி, மாற்றாந்தாய், அவளுடைய இரு குழந்தைகள். வருமானம் அடியோடு இல்லை. இருந்த சிறு சேமிப்புத்தொகை, என் தந்தையின் சிகிச்சைக்காகவும் பிறகு ஈமச்சடங்குச் செலவுகளிலும் கரைந்துவிட்டது. எனக்கோ எம்.ஏ. படித்து வக்கீலாக வேண்டுமென்று பெரும் ஆசை. அந்த நாளிலும் வேலை கிடைப்பது மிகவும் அரிதாயிருந்தது. மிகவும் பாடுபட்டால் பத்துப் பன்னிரண்டு ரூபாய் மாதச் சம்பளத்தில் ஒரு வேலை கிடைக்கலாம். ஆனால் நான் படிப்பைத் தொடர்வதில் பிடிவாதமாயிருந்தேன். என் கால் விலங்குகள் வெறும் இரும்பு மட்டுமாக இல்லை. எல்லா உலோகங்களும் சேர்ந்து உருவாக்கியதாய் இருந்தன. ஆனால் நானோ மலைச் சிகரத்தை அடைய விரும்பினேன்.”

வாழ்க்கை கடினமாயிருந்தது. நல்ல ஆடையோ காலணியோ இல்லை. அந்நாட்களைப் பற்றிப் பிரேம்சந்த் மேலும் சொல்கிறார்:

“நான் காசியில் ராணிக் கல்லூரியைச் சார்ந்த உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன். தலைமை ஆசிரியர் கட்டண விலக்கு அளித்திருந்தார். பரீட்சை நெருங்கிக்கொண்டிருந்த சமயம். நான் மூன்றரை மணிக்குப் பள்ளியை விட்டுக் கிளம்பி, ‘மூங்கில் வாசல்’ என்று வழங்கிய ஊர்ப்பகுதியில் ஒரு பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போவேன். நான்கு மணிக்கு அங்கே போய்ச் சேர்ந்து ஆறு வரையில் கற்பிப்பேன். பிறகு, ஊரிலிருந்து ஐந்து மைல் தள்ளிக் கிராமப்புறத்திலிருந்த என் வீட்டுக்குக் கிளம்புவேன். எத்தனை வேகமாய் நடந்தாலும் எட்டு மணிக்கு முன் வீடு போய்ச் சேர முடியாது. காலையில் எட்டுக்கெல்லாம் கிளம்பிவிட வேண்டும். இல்லையானால் பள்ளிக்கு நேரத்தோடு போக முடியாது. இரவு உணவுக்குப் பிறகு கை விளக்கை வைத்துக்கொண்டு படிக்க உட்காருவேன். எப்போது தூங்கிப் போவேனோ எனக்கே தெரியாது. எனினும் என் உறுதி தளரவில்லை.”

தந்தையின் மறைவுக்குப்பின் நிலைமை பின்னும் கடினமாயிற்று. வீட்டு நிலவரம் கவலைக்கிடமாய் இருந்ததால் அந்த ஆண்டு அவரால் பரீட்சை எழுத முடியவில்லை. அடுத்த ஆண்டு (1898) எழுதினார். பரீட்சையில் தேறிவிட்டாரென்றாலும் இரண்டாம் வகுப்புத்தான் கிடைத்தது. ராணிக்கல்லூரியில் சேரும் நம்பிக்கை இப்போது இல்லை. ஏனெனில் அங்கு முதல் வகுப்பில் தேறும் மாணவர்களுக்கு மட்டும் தான் கட்டண விலக்கு கிடைக்கும். அந்த ஆண்டு ஹிந்துக் கல்லூரி நிறுவப்பட்டபோது பிரேம்சந்த் அதில் சேர்ந்து பயில நிச்சயித்தார்.

ஆனால் கணிதத்தில் நடந்த நுழைவுப் பரீட்சையில் தேறாததால் அந்த நம்பிக்கையும் வீணாயிற்று. கணிதம்தான் அவருக்கு எப்போதுமே இடையூறு. "என்னைப் பொறுத்தமட்டில் கணிதம் எவரெஸ்ட் மலையின் சிகரம் போன்றது. என்னால் ஒருபோதும் அதை எட்டமுடியாது" என்று அவர் எழுதுகிறார். அது அவரை ஹிந்துக்கல்லூரியில் நுழைய விடாமல் தடுத்தது மட்டுமல்ல, 'இன்டர்மீடியட்' பரீட்சையையே பல ஆண்டுகள் வரையில் தேற முடியாமல் செய்தது. இருமுறை தனி மாணவனாகத் தேர்வு எழுதி இரு முறையும் தோல்வியடைந்தபின் நிராசையுற்று நிறுத்திவிட்டார். பின்னால், புதிய விதிகளின்படி கணிதத்துக்குப் பதிலாக வேறு பாடம் எடுத்துக் கொள்ள முடிந்தபோது தான் அவரால் பரீட்சையில் தேற முடிந்தது. அது நடந்தது 1916ஆம் ஆண்டில். அவர் மெட்ரிகுலேசன் தேறி அப்போது முழுசாகப் பதினெட்டு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன!

கதைக்குத் திரும்பி வருவோம். ஹிந்துக் கல்லூரியில் சேர முடியாமல் போனதும் பிரேம்சந்த் பெருத்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார். ஆனால் கல்வி ஆர்வம் தீவிரமாகவே இருந்தது.

"வீட்டில் உட்கார்ந்து என்ன செய்ய? எப்படிக் கணிதத்தில் முன்னேறிக் கல்லூரியில் சேர்வது என்பதே என் பிரச்னை. இதற்கு நான் ஊருக்குள் வசித்தாகவேண்டும். நல்ல வேளையாக ஒரு வக்கீலின் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் வேலை கிடைத்தது. சம்பளம் ஐந்து ரூபாய். இரண்டு ரூபாயில் நான் வாழ்க்கை நடத்திக்கொண்டு மிச்ச மூன்றைக் குடும்பத்துக்குத் தரத் தீர்மானித்தேன். வக்கீலின் குதிரை லாயத்துக்கு மேலே இருந்த மண்ணாலான சிறு அறையில் தங்க எனக்கு அனுமதி கிடைத்தது. ஒரு சாக்குத்துணியைப் படுக்கையாய் விரித்துக்கொண்டேன். கடைத் தெருவிலிருந்து ஒரு சிறு விளக்கு வாங்கிக்கொண்டு என் நகர வாழ்வைத் தொடங்கினேன். வீட்டிலிருந்து சில பாத்திரங்களும் கொண்டுவந்து அன்றாடம் ஒரு முறை கூழ் ஆக்கினேன். பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவியபின் வாசக சாலைக்குக் கிளம்பிவிடுவேன். கணிதத்தை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு பெரும்பாலும் நாவல்கள்தான் படிப்பேன். பண்டிட் ரதன்நாத் தர் எழுதிய 'ஃபஸானா-ஏ-ஆஜாத்' (ஆஜாதின் வரலாறு), 'சந்திரகாந்த ஸந்தாகி' (சந்திர காந்தனின் சந்ததிகள்) ஆகியவற்றை அப்போதுதான் படித்தேன். பங்கிம் சட்டர்ஜி படைப்புகளின் உருது மொழி பெயர்ப்புகளில் கிடைத்தவற்றையெல்லாம் படித்து முடித்தேன்!"

nbt.india
एकः सूते सकलम्

எனினும் அவரது மாணவப் பருவத்தில் நிலவிய வறுமை என்னமோ எப்போதும் போல் பயங்கரமாகவே தான் இருந்தது.

"அந்தக் குளிர்காலத்தில் என்னிடம் காலணா கூட மிச்சமில்லை. மிக மலிவாக எந்தத் தானியம் கிடைக்கிறதோ தினம் காலணாவுக்கு வாங்கித்தின்று சில நாட்கள் கழித்திருந்தேன். வட்டிக்கடைக்காரர்கள் பணம் கடன் தர மறுத்து விடுவார்கள். அல்லது எனக்குக் கூச்சத்தினால் கேட்க முடியாமல் போய்விடும். ஒருநாள் மாலை புத்தக வியாபாரி ஒருவரிடம் ஒரு புத்தகத்தை விற்கச்சொன்னேன். அது 'சக்ரவர்த்தியின் கணிதம்' என்ற நூலின் விளக்க உரை. இரண்டு வருடங்களுக்கு முன் வாங்கியது. இதுவரை எப்படியோ அதை விற்காமல் வைத்திருந்தேன். இன்று வேறு வழியே இன்றி விற்க முடிவு செய்தேன். அதை நான் இரண்டு ரூபாய்க்கு வாங்கியிருந்தபோதிலும் இப்போது ஒரு ரூபாய்க்குத் தர ஒப்புக்கொண்டேன். ரூபாயை வாங்கிக்கொண்டு நான் கடையி லிருந்து கிளம்பிய போது அங்கு உட்கார்ந்திருந்த அடர்ந்த மீசைக்காரர் ஒருவர் என்னிடம் 'நீ எங்கேயப்பா படிக்கிறாய்?' என்று கேட்டார்.

'எங்குமில்லை, ஆனால் எதிலாவது சேரலாமென்று நம்புகிறேன்.'

'மெட்ரிக் பாஸ் செய்துவிட்டாயா? வேலை வேண்டாமா?'

'வேலை எங்கும் கிடைக்கவில்லையே!'

"இந்தக் கனவான் ஒரு சிறு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர். அவருக்கு ஓர் உதவி ஆசிரியர் தேவையாயிருந்தது. பதினெட்டு ரூபாய் சம்பளம் தருவதாக அவர் சொன்னதுமே நான் ஒப்புக் கொண்டேன். அந்தச் சமயத்தில் பதினெட்டு ரூபாய் என்பது, நம்பிக்கை இழந்திருந்த என் கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாயிருந்தது. மறுநாள் அவரைச் சந்திப்பதாக ஏற்பாடு செய்து கொண்டு வானத்தில் மிதந்தவாறு அங்கிருந்து சென்றேன். இது நடந்தது 1899ஆம் ஆண்டில். நான் எதையும் சமாளிக்கத் தயாராயிருந்தேன். கணிதம் தடுக்காத பட்சத்தில் நிச்சயமாய் முன்னேறுவேன் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால், மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இருக்குமென்பதைச் சற்றும் புரிந்து கொள்ளாத பல்கலைக் கழகத்தின் மூடப்போக்குதான் எல்லாவற்றை விடப் பெரிய முட்டுக்கட்டையாயிருந்தது. அப்போதும் சரி, அதன்பின் பல ஆண்டுகள் வரையிலும் சரி, பல்கலைக்கழகம் யாவரையும் நடத்திய விதம், நெட்டையோ, குட்டையோ யாவரையும் ஒரே படுக்கையில் பொருத்திய ஒரு கொள்ளைக்காரனைப் பற்றிய பிரசித்தமான கதையை நினைவூட்டுவதாக இருந்தது."

nbt.india
एकः सूते सकलम्

3

சுனார் என்பது காசியிலிருந்து நாற்பது மைல் தொலைவிலுள்ள ஒரு சிறு ஊர். அங்கு ஒரு பழைய கோட்டையும், பிரிட்டிஷ் ராணுவத்தின் ஒரு பிரிவும் இருந்தன. பிரேம்சந்த் அந்த ஊருக்கு உடனே சென்று வேலையில் அமர்ந்தார். அப்போதைய அவல நிலையில் இதை விட அதிருஷ்டமான வாய்ப்பு அவர் எதிர்பார்ப்பதற்கில்லை.

பள்ளி ஆசிரியராக அவர் வாழ்வு இவ்வாறுதான் தொடங்கியது. அடுத்த இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு அதுதான் அவர் வாழ்வு.

அது சுவையற்ற வாழ்வுதான். பள்ளி நேரத்துக்குப் பிறகு செய்வதற்கு ஏதுமில்லை. ஆனால் அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவருக்கு எப்போதும் புத்தகங்கள் துணையிருந்தன. அவர் 'புத்தகப்புழு' என்று வேகமாய்ப் பெயரெடுத்துக் கொண்டிருந்தார். புழுவும்கூட ஓர் எல்லையில் திரும்பி எதிர்க்கும் என்பார்கள். அதேதான் ஆயிற்று. பள்ளிக் குழுவுக்கும் ஒரு ராணுவக் குழுவுக்கும் இடையில் கால்பந்துப் போட்டி நடந்தது. பள்ளிச்சிறுவர்கள் தம் குழுவினரை உரக்கச் சப்தமிட்டு உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இயற்கைதானே! அதற்கேற்றாற்போல் ராணுவக் குழு தோல்வியடைந்தது. பள்ளி மாணவர்களின் வெற்றி முழக்கங்கள் வானைப் பிளந்தன. படை வீரர்களுக்குத் தாங்கவில்லை. அவர்களில் ஒருவன் பள்ளிக் குழுவின் ஓர் ஆட்டக்காரனை வெறித்தனமாக உதைத்தான். பார்க்கப்போனால் இதெல்லாம் அதிசயமே இல்லை. விளையாட்டுப் போட்டிகளுக்குப் பிறகு கோபதாபங்கள் உச்சத்தில் இருக்கும்போது இத்தகைய கைகலப்புகள் நேர்வது சகஜம். ஆனால் அங்கிருந்த பிரேம்சந்துக்கு ஏனோ இது பொறுக்கவில்லை. ஒருகால், இதில் வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்தையும் ஆக்கிரமிப்பையும் கண்டாரோ என்னமோ! 'இந்தப் பயல் ஒரு வெள்ளையனை உதைத்திருப்பானா?' என்ற எண்ணம் அவரைச் சுரீரென்று தைத்திருக்கலாம். உடனே அருகிலிருந்த எல்லைக் கம்பைப் பிடுங்கிக்கொண்டு ராணுவத்தினரைத் தாக்கத் தொடங்கி விட்டார். பள்ளி மாணவர்களும் சேர்ந்துகொள்ள, சிப்பாய்கள் தம் ஆயுள் முழுவதும் மறக்க முடியாத வகையில் அடி வாங்கினார்கள்.

சண்டை ஓய்ந்தபோது எல்லாருக்கும் ஆச்சரியமளித்தது ஒரு விஷயம்தான். இத்தனை பேரிருக்க, கடைசியில் தலைமையை ஏற்றது இந்த அடக்கமான மனிதரா! கேவலம் இந்தப் புத்தகப் புழுவா!

nbt.india

அவருள் இத்தனை ஆவேசம் இருக்குமென்று யார்தான் நினைத்திருக்க முடியும்! உண்மையில் அப்படி ஏதும் இல்லை. சிறிய, சொந்த விஷயங்களில் அவரைப் பயந்தாங்கொள்ளி என்றுகூடச் சொல்லலாம். ஆனால் நாட்டின் கௌரவம் பாதிக்கப்படும்போதோ, அல்லது அவருடைய சமுதாய நியாயக் கோட்பாடு மீறப்படும்போதோ விஷயமே வேறுதான். அப்போது ஜாக்கிரதை உணர்வையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு முழு தைரியத்துடன் செயல்படுவார்.

அவருடன் வேலை பார்த்த சக ஆசிரியரான மௌல்வி இப்னே அலி என்பவர் பள்ளி அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளானபோது பிரேம்சந்தின் இந்தத் தைரிய இயல்பு மீண்டும் சோதனைக்குட்பட்டது.

பிரேம்சந்தின் வாழ்க்கை பரம தரித்திர நிலையில்தான் அதற்கு முன்னும் இருந்து வந்தது, அப்போதும் இருந்தது. தன்னையும் ஊரிலிருந்த குடும்பத்தையும் பராமரிக்கப் பதினெட்டு ரூபாய் என்பது போதுமானதல்ல. எனவே கடுமையான பண நெருக்கடிதான். சில நாட்களுக்கு முன்புதான் தம் கம்பளிக்கோட்டை விற்க வேண்டியிருந்தது. இந்த உத்தியோகம் அவருக்குக் கிடைத்த ஒரே ஒரு அதிருஷ்ட வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். எதிர்காலம் இருள்மயமாய் இருந்தது. ஆகவே, அவர் சிறிது ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம். ஆனால் அவரோ சற்றும் யோசிக்கவில்லை. அதிகாரிகள் மௌல்வி விஷயத்தில் அநீதி இழைப்பதாக அவர் திடமாய்க் கருதியதால் வெளிப்படையாகவே மௌல்வியை ஆதரித்தார். இதன் விளைவாக, கத்தி விழுந்தபோது இவர் கழுத்திலும் விழுந்தது. அந்த ஆண்டின் இறுதிக்குள் அவர் வேலை இழந்து மறுபடியும் தெருவில் நின்றார்.

அதிருஷ்டவசமாக, ராணிக்கல்லூரியின் முதல்வர் திரு. பேகனின் உதவி கிட்டியது. பேகனுக்கு இந்தக் கெட்டிக்கார இளைஞரைப் பிடிக்கும். அவர் வார்த்தைக்குக் கல்வி இலாகாவில் மதிப்பும் இருந்தது. எனவே அவருடைய பரிந்துரையால் பிரேம்சந்துக்கு பரைச் என்னும் இடத்தில் ஓர் அரசுப் பள்ளியில் ஆசிரியராக வேலை கிடைத்தது.

இதிலிருந்து 1921 வரையில் பிரேம்சந்த் பிரதாப்கட், அலகாபாத், கான்பூர், ஹமிர்புர், பஸ்தி, கோரக்பூர் ஆகிய பல இடங்களில் அரசுப் பள்ளிகளில் வேலை பார்த்தார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அடிக்கடி மாற்றல் ஆனது அவர் உடல்நலத்துக்கு நல்லதாக இல்லாவிட்டாலும், எழுத்தாளன் என்ற முறையில் நிச்சயம் அவருக்கு சிறப்பாகவே இருந்தது. வளமான, வகை வகையான வாழ்க்கை

அனுபவங்கள்தாம் ஓர் எழுத்தாளனின் சிறந்த முதலீடு. அவன் தன் இலக்கிய வாழ்வு முழுவதும் அந்த முதலீட்டைப் பெருக்கிக்கொண்டும் அதிலிருந்து எடுத்துக்கொண்டும் இருக்கிறான். என்றைக்கு அவனுடைய அனுபவச்செல்வம் வற்றிப் போகிறதோ அன்றே அவனும் வற்றிப் போகிறான். அதன்பின் அவன் எழுத்து நின்றுவிடுகிறது. இவ்வகையில் பிரேம்சந்த் செல்வம் மிக்கவர். வாழ்வில் அவர் பட்டிருந்த

'ஸேவாஸதனம்' என்ற தமிழ்த் திரைப்படத்தில் எம்.எஸ். சுப்புலட்சுமி
(இது பிரேம்சந்த் எழுதிய நாவலிலிருந்து எடுக்கப்பட்ட திரைப்படம்.)

கஷ்டமெல்லாம் எழுத்தாளன் என்ற முறையில் அவருக்கு வளமான மூலப்பொருளாகி விட்டது. வேலை கிடைத்து உணவுப் பிரச்னை தீர்ந்துவிட்டபிறகு, எழுத்தாளனாக உருவாகிக் கொண்டிருக்கும் பருவத்தில் உள்ளவனுக்கு, இப்படி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று கொண்டிருப்பதை விடப் பெரிய நன்மை வேறில்லை.

ஆகவே ஏறக்குறைய இந்தக் காலத்தில் – சுமார் 1900இல் அவர் எழுத்துப் பணியைத் தீவிரமாக மேற்கொண்டது ஆச்சரியமில்லை. துரதிருஷ்டவசமாக இந்தத் தொடக்க கால எழுத்து எதுவும் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. இப்போதுள்ளவற்றுக்குள் முந்தையதென்று ஒரு சிறிய, முற்றுப்பெறாத, உருது நாவல் சில ஆண்டுகளுக்கு முன்பு தெரியவந்தது. ‘அஸ்ரார்–ஏ–மாபித்’ (ஒரு கோயிலின் மர்மங்கள்) என்ற இந்த நாவல் காசியிலிருந்து வெளியான ஊர் பேர் தெரியாத ஒரு வாரப்பத்திரிகையில் 1903 இறுதியிலிருந்து 1905 தொடக்கம் வரை தொடர்கதையாக வெளிவந்தது. இந்தக் குறுநாவல் ஒரு கோயில் ‘மஹந்த்’தின் (தலைமைப் பூசாரி) உல்லாச வாழ்வை அம்பலப்படுத்துகிறது. இதன் நடை, முன்பு அவர் விரும்பிப் படித்துக்கொண்டிருந்த பழைய காதல் சாகசக் கதைகளின் நடைதான். ஆனால் இந்த எழுத்தாளருக்கு எழுத்தைப் பற்றி உள்ள கண்ணோட்டத்தில் அந்தக் கதைகளைப் போல் அல்லாமல் வேறுபட்டுக் காணப்படுகிறது. இவர் வாசகனை மகிழ்விப்பதற்கு மட்டுமல்ல, அவன் அறிவை வளர்ப்பதற்காகவும் எழுதுகிறார். படைப்பிலக்கியம் உணர்ச்சிகளைப் பண்படுத்துவதன் மூலம் அறிவை வளர்க்கிறது. ஏறக்குறைய இதே காலத்தில் எழுதப்பட்ட ‘ஹம் குர்மா ஓ ஹம் ஸவத்’ என்ற சற்றுப் பெரிய நாவல் ஹிந்தியில் மொழிபெயர்ப்பாகி ‘பிரேமா’ என்ற தலைப்பில் 1907இல் வெளிவந்தது. இளவயதிலேயே கணவனை இழந்து, ஆசாரங்களின்படி தனியாக வறண்ட வாழ்வு வாழ வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்ற இளம் விதவைகளின் துயர நிலையைப் பற்றி நாம் படித்திருக்கிறோம்; பார்த்துமிருக்கிறோம். ‘பிரேமா’ ஒரு பால்ய விதவையின் வாழ்வைச் சித்திரிக்கிறது. லட்சியவாதியான கதாநாயகன் அவளை மணந்து கொள்வதாகப் பிரேம்சந்த் காட்டுகிறார். பிரேம்சந்த் இந்த லட்சியத்தை நியாயமானதென்று உண்மையாகவே நம்பினார் என்பதும், வெறும் உபதேசம் செய்யவில்லை என்பதும் விரைவில் நிரூபணமாயிற்று. அவர் சிவராணி தேவி என்ற பால்ய விதவையை 1906இல் மணந்து கொண்டார்.

இந்திய தேசிய காங்கிரஸில் சுதந்திரப் போராட்டத்தை மக்கள் விழிப்புணர்ச்சி, மக்கள் நடவடிக்கை என்பவற்றோடு சம்பந்தப்படுத்திச் சிந்தித்த முதல் மனிதர் பால கங்காதர திலகரே ஆவார். அதற்குமுன்னும், அதற்குப் பின் காந்தி வரும் வரையிலும், காங்கிரஸ் என்னும் தேசிய இயக்கமானது, ஆட்சியில் இந்தியர்களுக்குப் பங்களிப்பது சாத்தியமா என்பது பற்றி விவாதங்களும், பேச்சு வார்த்தைகளும் நடத்துவதிலேயே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தது. ஆனால் துரதிருஷ்ட வசமாகத் திலகர் அதிக காலம் இல்லை. 1908ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் அவரைக் கைது செய்து பர்மாவில் மாண்டலே சிறைக்கு அனுப்பி விட்டார்கள். (பர்மா அப்போது பிரிட்டிஷ் இந்தியாவின் அங்கமாக இருந்தது.)

எனினும் பிரேம்சந்த் மனத்தில் திலகர் வெகுவாகப் பதிந்துவிட்டார். மேலும், வங்காளத்தைக் கூறு போட வேண்டுமென்ற கர்ஸனின் பொல்லாத திட்டத்தினால் அங்கு மூண்ட சுதேசி இயக்கம் பிரேம்சந்தை அதற்கு முன் இல்லாத வகையில் சுதந்திரப் போராட்டத்தின்பால் இழுத்தது. சுதேசி இயக்கத்தைத் தொடர்ந்து பல ரகசிய சங்கங்கள் பிறந்தன. பின்னால் நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் பரவிய இந்தச் சங்கங்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதமேந்திச் செயல் புரியும் விரதம் பூண்டவை. சாவுக்குத் துணிந்து தம்மை லட்சியத்துக்கே பூரணமாய் அர்ப்பணித்துக் கொண்ட தீவிரவாதிகள் நிறைந்த இந்தச் சங்கங்கள் மக்களின் உற்சாகத்தைத் தீயாய் மூண்டெழச் செய்ததில் வியப்பில்லை. அவை இளைஞன் பிரேம்சந்தின் மனத்தையும் தூண்டி விட்டன. இந்தத் தூண்டுதலால் அவர் பல எழுத்துகளையும் படைத்தார். சிறந்த இத்தாலிய வீரர்களான கரிபால்டி, மாஜினி; இந்திய நாகரிகத்தின் சிறப்பை வெற்றிகரமாய் நிலைநாட்டி மேலை நாடுகள் இந்தியர்களைப் புதிய கண்களால் பார்க்கும்படி செய்த விவேகானந்தர்—இவர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாய் எழுதினார். விவேகானந்தர் நிச்சயமாக ஒரு புதுமையான சுவாமிதான்; புரட்சிகரமான சுவாமி. அவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பில் பிரேம்சந்த் அவர் வார்த்தைகளை இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்:

“எனது இளம் நண்பர்களே! பலசாலிகளாய் இருங்கள். இதுதான் நான் உங்களுக்குக் கூறும் ஒரே அறிவுரை. கீதையைப் பயில்வதை விட கால்பந்து விளையாடுவதன்மூலம் மேலும் சுலபமாய் நீங்கள்

சுதந்திரத்தைப் பெறமுடியும். உங்கள் தசைகள் உறுதியாகவும், பலம் மிக்கவையாகவும் இருக்கும்போது நீங்கள் கீதையின் போதனைகளை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். கீதையின் போதனைகள் கோழைகளிடம் சொல்லப்படவில்லை. வலிமையும் தீரமும் மிக்க அர்ஜுனனுக்கே சொல்லப்பட்டன”.

இந்தக் கட்டத்தில் அவர் நாட்டுப்பற்று தொனிக்கும் சிறுகதைகளும் எழுதினார். அவற்றுள் ‘யாவினும் அரிய அணிகலன்’ என்பது முதல் கதை. அப்போது பழக்கத்திலிருந்த காதல் வீரக் கதைகளின் பழைய நடைதான். ஆனால் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சிந்தப்படும் ரத்தத் துளியே உலகில் யாவினும் அரிய அணிகலனாகும் என்று முடிவுறும்போது கதையில் புதுக்குரல் தொனிக்கிறது. ஓர் அவசர உணர்வு ஒலிக்கிறது. இதுவும் இவ்வகையான பிற கதைகளும் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்தன. அதற்கு அவர் ‘ஸோஜ்–ஏ–வதன்’ (தாய்நாட்டின் துயரங்கள்) என்று தலைப்பிட்டார். 1909இல் பிரசுரமான இந்நூல் விரைவிலேயே அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தது. ’நவாப் ராய்’ என்பவர் பெயரில் புத்தகம் வெளி வந்திருந்தாலும் ஆசிரியர் யார் என்று கண்டுபிடிக்க அதிகாரிகளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. பிறகு ஒரே அமர்க்களம்தான்.

“அப்போது நான் ஹமிர்புர் மாவட்டத்தில் கல்வி இலாகாவில் ஒரு துணை ஆய்வாளராக (டெபுடி இன்ஸ்பெக்டர்) இருந்தேன். அக்கதைகள் வெளிவந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை நான், என் கூடாரத்தில் இருந்தபோது மாவட்ட ஆட்சியாளரை (ஜில்லா கலெக்டர்) உடனே வந்து பார்க்கும்படி உத்தரவு வந்தது. அவர் அப்போது குளிர்காலச் சுற்றுப்பயணத்தில் இருந்தார். நான் வண்டியில் மாடு பூட்டிக்கொண்டு இரவில் முப்பது நாற்பது மைல் பிரயாணம் செய்து மறுநாள் போய்ச் சேர்ந்தேன். அவர் முன் என் புத்தகத்தின் ஒரு பிரதி இருந்தது. எனக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. அந்த நாளில் நான் நவாப் ராய் என்ற புனைப் பெயரில் எழுதிக்கொண்டிருந்தேன். இந்தப் புத்தக ஆசிரியரை ரகசிய போலீஸ் தேடிக் கொண்டிருந்ததாய் முன்பே எனக்குத் தெரிய வந்திருந்தது. நான் கண்டுபிடிக்கப்பட்டு விட்டேன் என்பதும், இப்போது விளக்கம் கேட்க என்னை அழைத்திருக்கிறார் என்பதும் புரிந்துவிட்டது.

‘இந்தப் புத்தகத்தை நீதான் எழுதினாயா?’ என்று ஆட்சியாளர் என்னைக் கேட்டார். ஆம் என்றேன்.

nbt.india
एक: सूते सकलम्

“ஒவ்வொரு கதையின் பொருளையும் சொல்லச் சொன்னார். கடைசியில் கோபம் மிகுந்து, ‘உன் கதைகளிலெல்லாம் ராஜதுரோகம் நிறைந்திருக்கிறது. இது பிரிட்டிஷ் அரசாங்கமாயிருப்பது நீ செய்த அதிருஷ்டம். மொகலாய சாம்ராஜ்யமாயிருந்தால் உன் கைகள் இரண்டையும் வெட்டியிருப்பார்கள்’ என்றார்.

“அந்த நூலின் எல்லாப் பிரதிகளையும் நான் அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் இனி கலெக்டரின் அனுமதியின்றி எதுவும் எழுதக் கூடாதென்றும்” தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்த மட்டோடு தப்பினோம் என்று எண்ணினேன்.

ஒருவகையில் அது உண்மைதான். ஆனால் கலெக்டரின் அனுமதியின்றி எழுதவே கூடாது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிபந்தனை. நவாப் ராய் அதை நிறைவேற்றத் தயாராயில்லை. ஆகவே, பிரேம்சந்த் என்ற புனைப்பெயரில் தொடர்ந்து காரசாரமாகவே எழுதிவந்தார். இந்த எளிய மனிதரிடம் மிகுந்த உள்வலிமை இருந்தது.



பிரேம்சந்த் உருதுவில் எழுதிய கையெழுத்துப்பிரதி

1905 முதல் 1921 வரை இந்தியாவிலும் உலக அளவிலும் உண்மையாகவே ஒரு நெருக்கடியானதும் செயல் வேகம் மிக்கதுமான காலகட்டம். திலகர் தேசத் தலைவராக வெளிப்பட்டது, வங்காளத்தில் சுதேசி இயக்கம், 1905. வெடிகுண்டுகளும் துப்பாக்கிகளும் கொண்ட ரகசியப் புரட்சி சங்கங்கள், மின்ட்டோ–மார்லே சீர்திருத்தங்கள், 1909. முதல் உலக மகா யுத்தம், 1914–18. ரஷ்யப் புரட்சி, 1917.

காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்புதல், 1918. காந்தி ஆங்கிலேயர்களின் போர் முயற்சிக்கு ஒத்துழைப்புக் காட்டும் வகையில் பிரிட்டிஷ் ராணுவத்துக்கான சிப்பாய்கள் திரட்டுகிறார். இதற்குப் எதிர்வினையாக பிரிட்டிஷ்காரர்கள் இரு விதமாய்ச் செயல்புரிகின்றனர். ஒன்று இணக்கமானது—மாண்டேகு–செல்ம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள், 1918. மற்றது மிருகத்தனமானது—ஜலியன் வாலாபாக் படுகொலை, 1919.

அதற்குப் பிறகு காந்தியின் ஒத்துழையாமை இயக்கம், 1921.

அது சம்பவங்கள் நிறைந்த காலகட்டம் என்பதில் ஐயமே இல்லை. இந்தச் சமயத்தில் பிரேம்சந்த் அன்றைய ஐக்கிய மாகாணத்தின் சிற்றூர்களிலும் கிராமங்களிலும் வசித்துக் கொண்டிருந்தார். இவை சிலசமயம் ரயில் செல்லும் பாதையிலிருந்து பல மைல்கள் தள்ளிக்கூட இருக்கும். ஆனால் உலக விவகாரங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு விடாதிருக்க அவர் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டார். செய்திப் பத்திரிகை படிப்பதில் மிகுந்த ஆர்வமுள்ள அவர், உள்ளடங்கிய ஊர்களுக்குக்கூட நல்ல பத்திரிகைகளை வரவழைத்துக் கொண்டிருந்தார். எனவே அவ்வப்போதைய தேச, சர்வதேச நிகழ்ச்சிகள் அவரிடம் உடனுக்குடன் எதிரொலி எழுப்பியதில் ஏதும் ஆச்சரியமில்லை. ரஷ்யாவில் நிகழ்ந்த புரட்சியின் பாதிப்பை இந்நாட்டில் முதல் முதலாக உணர்ந்து செயல்பட்டவர்களுள் அவரும் ஒருவர். செய்திகள் பரவாவண்ணம் உலகமெங்கும் இருட்டடிப்பு நடந்திருந்த போதிலும் கூட அந்த ரஷ்யப் புரட்சி நிகழ்ந்து ஆறு மாதங்களுக்குள் அவர் தாம் எழுதிக்கொண்டிருந்த நாவலில் அதை ஆதரிக்கும் வகையில் குறிப்பிடுவதைக் காண்கிறோம். (கோஷா–ஏ–ஆஃபியத் என்ற அந்த உருது நாவல் 'பிரேமாசிரமம்' என்ற ஹிந்தி நாவலின் மூல உருது வடிவம்). இந்த மனப்பான்மை 1919ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி அவர் ஒரு நண்பனுக்கு எழுதும் கடிதத்தில் பின்னும் தெளிவாய் வெளிப்படுகிறது. அப்போது வெகுவாக அடிபட்டுக்கொண்டிருந்த

nbt.india
एकः सूते सकलम्

மாண்டேகு—செல்ம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத் திட்டத்தை அக்கடிதத்தில் அவர் கண்டனம் செய்கிறார்.

"...இந்தச் சீர்திருத்தங்களின் ஒரே சிறப்பு இவை படித்த வர்க்கத்தினருக்குச் சில அதிகப்படி வசதிகளை வழங்குவதுதான். இதனால், அந்தப் படித்த வர்க்கத்தினர்கள் இதுவரை வக்கீல்களாகச் சாமானிய மக்களின் ரத்தத்தை உறிஞ்சியது போல் இனி ஆட்சியாளர்களாக அவர்களின் கழுத்தை நெறிப்பதற்கான சூழ்நிலை உருவாகும்".

பிரேம்சந்த் நிச்சயம் காலத்தை ஒட்டித்தான் சென்று கொண்டிருந்தார். ஏன், இன்னும் ஒரு அடி முன்னாலேயே நின்றார். அந்தச் சமயத்தில் அவர் உடல் நலம் சீர்குலைந்திருந்தது. தீராத சீதபேதி அவரை எலும்பும் தோலுமாக்கியிருந்தது. ஆனால் அவர் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. தேசிய எழுச்சி நேர்ந்தபோது அவர் பின்தங்கி விடவில்லை. தீவிரமாக உழைத்தார். ஓய்வை மறந்தார். நாள் முழுவதும் பள்ளி நியமத்தில் கடுமையாக உழைத்துவிட்டு, இரவில் வெகுநேரம் வரை எழுத்து வேலையில் மூழ்கியிருப்பார். சிலசமயம் மனைவியின் கவனத்திலிருந்து தப்ப நள்ளிரவில் எழுந்து சப்தம் செய்யாமல் கை விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு பொழுது விடியும்வரை எழுதுவார். பிறகு ஏதேனும் வீட்டுப் பணிகள் இருக்கும். அதன்பின் பள்ளிக்கூடம். வெறிபிடித்தாற்போல் உழைத்தாரெனினும் வெளிப் பார்வைக்கு எல்லாம் அமைதியாய் இருப்பது போல்தான் தெரியும். ஏனென்றால் அவர் தம் எழுத்து வேலையைப் பெரிய விஷயமாய்க் காட்டிக் கொள்ளவில்லை. உண்மையாக வேலை மும்முரம் அதிகம் உள்ளவர்கள் பொழுதை வீணாக்காமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாய்ச் செயல் படுவதால் அவர்களுக்கு எல்லாவற்றுக்குமே நேரம் இருக்கும். அவருக்கும் அப்படித்தான். இருப்பினும், அன்றாடம் காலையில் ஏரும் எருதுமாய் வயலுக்குச் செல்லும் உழவன் போல் ஒரே சீராக நியமம் தவறாமல் எழுத்தில் ஈடுபடுவதற்கான திறனையும் அவர் தம்முள் ஏற்படுத்தி வைத்திருந்தார். 'கலைஞன்' என்று தனிக்குணங்கள் ஏதும் அவரிடம் இல்லை. 'படைப்புக்கு உகந்த மனநிலை' என்பதாகத் தனியாய் ஒன்று இருப்பதாய்ச் சொல்லும் கருத்தில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவருடைய கலை உணர்ச்சி அதையெல்லாம் விட வலிமையானது.எங்கேவேண்டுமானாலும்எப்போதுவேண்டுமானாலும் உட்கார்ந்து உடனே எழுத முடிகிறாற்போல் அவர் தம்மைப்

பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டிருந்தார். மனநிலை என்பது அவர் வசத்தில் இருந்ததே தவிர அவர் அதன் அடிமையாயில்லை.

நாட்டு மக்களுக்கும் அவர்கள் சுதந்திரம் பெறவேண்டும் என்னும் லட்சியத்துக்கும் அவர் தம்மைத் தீவிரமாய் அர்ப்பணித்துக் கொண்டிருந்ததே இதற்கெல்லாம் காரணமாய் இருக்கலாம். மக்களின் சுதந்திரம் என்பது ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருத்தல், உள்நாட்டுச் சுரண்டல்காரர்களிடம் அடிமைப்பட்டிருத்தல் ஆகிய

40 வயதில் பிரேம்சந்த்

nbt.india
एकः सूते सकलम्

இரண்டுமே நீங்குகிற சுதந்திரமாகும். பிரேம்சந்த் தம்மை இவ்வாறு அர்ப்பணித்துக் கொண்டிருந்த ஈடுபாடு மிகமிக உண்மையானது. அவர் தம் மைப்பேனாவைத் துப்பாக்கியாய்க் கொண்ட ஒரு சுதந்திரப் போர் வீரனாகக் கருதிக்கொண்டாரோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. எத்தனையோ இடையூறுகளை மீறி அவர் இந்தக் கால கட்டத்தில் நிறைய எழுதிக் குவித்தார். எண்ணற்ற சிறுகதைகள், பெரிதும் சிறிதுமாய் ஆறு நாவல்கள், டால்ஸ்டாயின் 'நீதிக்கதைகளும் குட்டிக் கதைகளும்' என்ற நூலின் மொழிபெயர்ப்பு, அவ்வப்போதைய முக்கியப் பிரச்னைகளைப் பற்றிக் கட்டுரைகள். இந்தக் கட்டுரைகளில் அவர், சுதந்திரம் என்பதைச் சாமானிய மக்களோடு தொடர்புபடுத்தி விளக்கம் கொடுத்தார். தேசிய இயக்கம் இதே கருத்தைப் பரப்பி அதை ஒரு கண்கூடான உண்மையாக நிலைநாட்டுவதற்கு வெகுகாலம் முன்னதாகவே அவர் தம் கட்டுரைகளில் இதைச் செய்துவிட்டார்.

அவருடைய நாவல்களில் சில பின்வருமாறு: 'ஜல்வா–ஏ–ஈஸார்' அல்லது 'வர்தான்'. இது ஒரு தேசபக்த சுவாமியைக் கதாநாயகனாகக் கொண்டு பங்கிம் சந்திரரின் 'ஆனந்தமடம்' நாவலையொட்டி எழுதப்பட்டது. 'பஜார்–ஏ–ஹுஸன்' அல்லது 'ஸேவாஸதன்' என்ற நாவல் விபசாரம் என்னும் சமூகத் தீமையைப் பற்றியது. 'கோஷா–ஏ–ஆஃபியட்' அல்லது 'பிரேமாசிரமம்' என்ற நாவல் நிலத்துக்குச் சொந்தக்காரனாய் இருந்தும் தான் அதை உழாமல் தனக்காக அதை உழுகிற விவசாயியின் ரத்தத்தையே உறிஞ்சும் புல்லுருவி போன்றவர் களைக் கொண்ட நிலச்சுவான்தார் முறை என்னும் மற்றொரு சமூகத் தீமையைப் பற்றியது.

அவர் தரும் தீர்வுகள் தற்கால வாசகனுக்குச் சற்று லட்சியத் தீர்வுகளாய்த் தோன்றலாம். அது முக்கியமில்லை. அரை நூற்றாண்டுக்கு முந்தைய அக்காலத்திலேயே பிரேம்சந்த் இந்தக் கேள்விகளைத் தம் நாவல்களிலும் சிறுகதைகளிலும் எழுப்பினார். அதுவரை வெறும் காதலும் வீரமுமான சம்பவ வரிசைகளாக மட்டுமே பொழுதுபோக்காக இருந்து வந்த நாவல், சிறுகதை ஆகிய துறைகளைத் தமது ஆழ்ந்த இலக்கிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தியதன் மூலம் ஆழமான நாவல், ஆழமான சிறுகதை என்ற இரு இலக்கிய வகைகளை ஹிந்தி, உருது ஆகிய இரு மொழிகளிலும் உருவாக்கினார். இதுதான் முக்கியம்.

nbt.india
एकः सूते सकलम्

5

காந்தி தேசத்தலைமையை ஏற்றுக்கொண்டு நாடெங்கும் பயணம் செய்து, வரப்போகும் போராட்டத்துக்கு மக்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். 1921 பிப்ரவரி 8ஆம் தேதி அவர் கோரக்பூர் சென்று, எங்கும் செய்வதுபோலவே மக்களைப் போராட்டத்துக்கு எழுமாறு அறைகூவல் விடுத்தார். கூட்டத்திலிருந்த பிரேம்சந்த் அந்த அழைப்பைத் தமக்கும் விடுக்கப்பட்டதாகவே உணர்ந்தார். எப்படியும் அவருக்குத் தம் உத்தியோகம் ஏற்கனவே அலுத்து விட்டிருந்தது. அதை உதறிவிட்டு முழுக்க முழுக்க தேசிய இயக்கத்துக்காகவே உழைக்க எண்ணியிருந்தார். தமக்கு ஏதாவது ஒரு தனியார் வேலை பார்க்கும்படி சில மாதங்களாகவே நண்பர்களுக்கு எழுதிக் கொண்டிருந்தார். இனி ஆங்கிலேயர்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. இந்தச் சீற்றம் இப்போது தீவிர ஆத்திரமாய் மாறி ஆங்கிலேய அதிகாரத்துக்கு எதிர்ப்பாக உருவெடுத்திருந்தது. இரு முறை அவர் பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் மோதியதாகவும் உள்ளூரில் செய்தி வழங்குகிறது.

ஒரு பசுவின் விஷயமாய் மாவட்ட நீதிபதியுடன் மோதியது முதல் சந்தர்ப்பம். பிரேம்சந்தின் பசு நீதிபதி வீட்டின் சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே நுழைந்துவிட்டது. நீதிபதி கோபம் கொண்டு பசுவைச் சுட்டுவிடப் போவதாய்ச் சொன்னார். இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பிரேம்சந்த் உடனே அங்கு ஓடினார். முதலில் அவர் நயமாகவும், ஓரளவு வருத்தம் தெரிவித்தும்கூட நடந்து கொண்டார். ஆனால் நீதிபதியின் கோபம் தணியவே இல்லை. இதனால் பிரேம்சந்தும் சினமுற்று, "எங்கே, தைரியமிருந்தால் பசுவைச் சுட்டுக்கொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று சவால் விட்டார்!

கல்வி இலாகாவிலேயே ஓர் உயர் பதவி வகித்தவருடன் மோதிக்கொண்டது இரண்டாம் சந்தர்ப்பம். அந்த மனிதர் பிரேம்சந்தின் வீட்டை அடிக்கடி கடந்து போகும்போது அவர் வெளி வராந்தாவில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் அவர் எழுந்து வந்து இந்த 'துரை'க்கு சலாம் போட வேண்டுமென்று ஆதிக்க ஆணவத்தினால் எதிர்பார்த்தார்.

ஆனால் பிரேம்சந்தோ "என்ன பைத்தியக்காரத்தனம்! பள்ளி நேரம் முடிந்தபிறகு எனக்கு நானே எஜமானன்" என்று கூறித் தழைந்து போக மறுத்து விட்டார்.

nbt.india एक: सूत्रे सर्वम्

இதெல்லாம் அவருக்குப் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது. வேலையை விட்டு வெளியேறிவிடவே எண்ணினார். ஆனால் தீர்மானிப்பது எளிதாயில்லை. அவர் உடல்நிலை முன்பை விடவும் மோசமாகியிருந்தது. மேலும், சமீபத்தில் அவர் மகன் ஒருவன் வைசூரியில் இறந்து விட்டதால் அப்பொழுது மிகுந்த மனவேதனையில்

nbt.india
एकः सूते सकलम्

மனைவி சிவராணி தேவி

இருந்தார். இவையெல்லாம் தவிர, அவரிடம் சேமிப்பு ஏதுமில்லை. எதிர்காலம் இருள் சூழ்ந்து பயங்கரமாய்த் தோற்றமளித்தது. மனைவியும், இரு குழந்தைகளும் உள்ள ஒரு குடும்பஸ்தன் வேலையில்லாமல் இருப்பதற்கில்லை. முடிவெடுப்பது சிரமமாகத்தான் இருந்தது. ஒரு வாரம் முழுவதும் தீவிரமாய்ச் சிந்தித்த பின்புதான், இருபத்தோரு ஆண்டுகளாகப் பார்த்துவந்த அரசாங்க வேலையையும் பின்னால் அது கொடுக்கக்கூடிய ஓய்வு ஊதிய வசதியையும் அவரால் துறக்க முடிந்தது. திட சித்தமுள்ள முரட்டுக் கிராமியப் பெண்ணான அவர் மனைவி அவருக்குப் பக்கபலமாய் நின்றார். ஒருகால் அவருடைய தயக்கம் நீங்கவும் அவளே உதவியிருக்கலாம்.

இவ்வாறு அவர்கள் மீண்டும் ஆரம்பநிலைக்கே வந்து விட்டார்கள். சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சிறிது காலம் பிரேம்சந்த் ஒரு கதர் நிலையம் துவக்கி நடத்தினார். ஆனால் அந்த வேலை அவருக்கு ஏற்றதல்ல என்று விரைவிலேயே தெரிந்துவிட்டது. பிறகு உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் வேலைக்கு முயன்று பார்த்தார். அதிலும் பயனில்லாமல் போகவே கோரக்பூரிலிருந்து காசி செல்ல முடிவு செய்தார். அங்கு சில மாதங்கள் ‘மர்யாதா’ என்ற இந்திப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு காசி வித்யாபீடத்தின் பள்ளிப் பிரிவில் ஓர் ஆசிரியராக வேலை பார்த்தார். அதுவும் அதிக நாள் நீடிக்கவில்லை. அதன்பின் கான்பூருக்கு மார்வாரிப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராகச் சென்றார். அதுவும் பள்ளி ஆண்டின் ஒரு காலப்பகுதிக்கு மட்டும்தான்.

1923ஆம் ஆண்டுக்குள் பிரேம்சந்த் தம் கிராமத்தில் அமைதியாய் வாழத் திட்டமிட்டு, அங்கிருந்து நான்கே மைல் தள்ளியுள்ள நகர்ப்புறத்தில் ஓர் அச்சகமும் சிறிய பதிப்பகமும் நிறுவ முற்படலானார். இந்த யோசனை 1916 அளவில் கணேஷ் சங்கர் வித்யார்த்தி என்பவரோடு பழக்கம் ஏற்பட்டதிலிருந்தே அவரை ஆட்கொண்டிருந்தது. கணேஷ் சங்கர் வித்யார்த்தி என்ற இந்தச் சிறந்த மனிதரைப் பற்றி அதிகம் தெரியாமல் போனது ஒரு பெருங்குறை. அவரைப் பற்றி அவர் ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காகப் போராடிய ஒரு தியாகி என்பதுதான் தெரியும். ஆனால் அது அவரில் ஒரு பாகம் மட்டுமே. நாட்டின் சுதந்திர இயக்கத்தில் வெளிப்பட்ட தலையாய மாந்தருள் அவரும் ஒருவர். அசாதாரணமான தைரியமும், நேர்மையும் வாய்ந்தவர். மனித உருவில் விளங்கிய ஒரு மின் ஆற்றல் களஞ்சியம் போல் அவர் தம்பால் வந்த

nbt.india
एकः सूते सकलम्

பிரேம்சந்த் - 1924

nbt.india
एकः सूते सकलम्

அனைவருள்ளும் சக்தியைப் பாய்ச்சினார். அவர் கான்பூரில் ‘பிரதாப் பிரஸ்’ என்ற ஓர் அச்சகத்தை நிறுவி சுதந்திரத்துக்காகவும், சமூக நியாயத்துக்காகவும் போராடுவதையே தன் ஈடுபாடாகக் கொண்ட ஒரு பதிப்பகத்தின் மையமாக அதை நிலவச் செய்திருந்தார்.

பிரேம்சந்த் அவரைப் போலவே தாமும் ஏதாவது செய்ய வேண்டுமென்று உந்தப்பட்டதில் வியப்பில்லை. ஆனால் அவர் ஒரு விஷயத்தை மறந்து விட்டாரென்று தோன்றுகிறது. இதுபோன்ற

முயற்சிகள் வெற்றிபெற இரண்டு தேவைகள் உள்ளன. ஒன்று, அன்றாடத் தேவைகளுக்கான முதல். இரண்டாவது, தொழில் திறமை. (இந்தத் திறமை தன்னிடமே இல்லாவிட்டால் திறமையுள்ள வேறு யாராவது துணை இருக்க வேண்டும்.) பிரேம்சந்துக்கு இவை இரண்டுமே இல்லை. எனவே இந்த அச்சகமும் பதிப்பகமும் பிறகு வாழ்நாள் முழுவதும் அவருக்கு ஒரு பெரும் சுமையாகிவிட்டன. நிலைமை மிகவும் கஷ்டமாகிவிடவே அவர் மறுபடியும் வேலை தேடவேண்டி வந்தது. லக்னோவில் 'மாதுரி' பத்திரிகையின் ஆசிரியராக வேலை கிடைத்தது. ஆனால் நிர்வாகம் அவருக்கு உதவவில்லை. அது மட்டுமா? பாடப் புத்தகங்கள் தயாரிப்பது போன்ற அலுவலகத்தின் மற்ற மாமூல் வேலைகள் பலவற்றையும் அவர் தலையில் கட்டிவிடுவார்கள். இவ்வாறு பிரேம்சந்த் வெறும் உழைப்பு எந்திரமானார். அலுவலகத்தில் யாரோ வேடிக்கையாய்ச் சொன்னது போல், "பந்தயக் குதிரையைப் பொதி சுமக்கும் குதிரையாக்கி விட்டார்கள்!"

நிலைமை நாளுக்கு நாள் அதிகச் சலிப்பூட்டவே கடைசியில் பிரேம்சந்த் இந்த வேலையை விட்டுவிட முடிவு செய்தார். இதற்கிடையில் காசியில் தம் பதிப்பகத்தில் அவர் 'ஹன்ஸ்' என்ற பத்திரிகை தொடங்கியிருந்தார். ஆகவே 1932 மே மாதம் அவர் தம் நிறைவேறாத கனவுகளுடன் மீண்டும் காசிக்கே திரும்பிச் சென்று ஆறு ஆண்டுகளுக்கு முன் விட்டுச் சென்றிருந்த வாழ்வைத் தொடர்ந்தார்.

மறுபடியும் அதே பழைய கடும் உழைப்பு. ஆனால் அவர் பொருட்படுத்தவில்லை. அதுவே அவர் வாழ்க்கை முறையாகிவிட்டது. மேலும், பல ஆண்டுகளுக்குப் பின் தேசிய இயக்கத்தில் மீண்டும் ஒரு பேரலை எழுந்தது. கடமை அழைக்கும்போது அவருக்கு வேறு எதுவுமே பொருட்டல்ல. 'ஹன்ஸ்' பத்திரிகையே ஒரு பெரும் தலை வேதனையாகி விட்டபோதிலும் அவர் 'ஜாகரண்' (விழிப்பு) என்ற ஒரு வார இதழையும் பணபலம் இல்லாத நிலையிலேயே வெளியிடத் தீர்மானித்தார். சிறிய, சொந்த விவகாரங்களில் கவனமாக நடந்துகொள்ளும் அவரால் நாட்டு விடுதலை போன்ற பெரிய விஷயத்தில் மிகத் துணிகரமாய்ச் செயல்பட முடிந்தது. அது பரிபூரண ஈடுபாட்டில் விளைந்த துணிச்சல். ஒருகால் வாழ்வில் பெரும் செயல்களைப் புரியும் வழியே இது ஒன்றுதானோ என்னமோ! விளைவுகளைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறவன் எத்தனை வெற்றியடைந்த போதிலும் சிறு மனிதன்தான்.

அச்சகத்தை நடத்துவதில் பல பிரச்னைகள் இருந்தன. சில சமயம்

nbt.india

தொழிலாளர்களுக்குத் தருவதற்குப் பணம் இருக்காது. சிலசமயம் காகித வியாபாரிகளுக்குத் தருவதற்கு இருக்காது. மொத்தத்தில் மிகப் பரிதாபநிலை. ஆனால் பிரேம்சந்தோ உற்சாகம் நிறைந்தே இருந்தார். தன்னுள் அமைதி கண்டுவிட்டவனின் இன்பம் அது. அவரது சலியாத படைப்பாற்றலுக்கும் இதுவே முக்கியக் காரணம்.

வாழ்க்கை நிலை எத்தனை கடினமாயிருந்தாலும் அவருடைய எழுத்துப்பணி விடாமல் தொடர்ந்தது. லக்னோவில் அத்தனை கடுமையான உழைப்புக்கு இடையிலும் அவர் எப்படியோ பல சிறுகதைகளும் 'பிரதிஞான்' (சபதம்), 'நிர்மலா' என்னும் இரு சிறிய நாவல்களும் 'கபன்' (கையாடல்) என்ற பெரிய நாவலையும் எழுதியிருந்தார். அதுபோலவே லக்னோவிற்குப் போகுமுன் காசியில் அச்சகம் நிறுவியும் பிறகு அதை மிகுந்த பணக் கஷ்டத்தோடு நடத்திக்கொண்டும் இருந்த வேலை மும்முரத்தில் கூட—அத்தனை கடின உழைப்பிற்கும் தவிப்புக்கும் இடையே—'ரங்கபூமி' (வாழ்க்கை ஒரு மேடை). 'காயகல்ப' (உருமாற்றம்) என்னும் இரு மிகப்பெரிய நாவல்களும் 'ஸங்க்ராம்' (போர்), 'கர்பலா' என்னும் இரு நாடகங்களும், பல சிறுகதைகளும், சில வசனப் படைப்புகளும் எழுத அவருக்கு எப்படியோ நேரமும் ஆற்றலும் இருந்தன. காசிக்குத் திரும்பியபின் 'கர்மபூமி' என்ற மற்றொரு பெரிய நாவலை உருவாக்கிக் கொண்டிருந்தார். இது 1931–32 ஆண்டுகளில் நிகழ்ந்த தேசிய இயக்கத்தை அடிப்படையாய்க் கொண்டது. தேசியக் களத்தில் எது நடந்தாலும் ஒரு கவனமிக்க காவல்காரனைப் போல் இருந்த அவரிடம் அதன் பாதிப்பு உடனே தோன்றிவிடும். இப்படி ஒரே குறியாக ஒருமனப்பட்டுச் செயல்புரிவது தான் பிரேம்சந்தின் பெரும் வலிமை. பிரபல பத்திரிகைக்காரரும் சுதந்திர பாரதத்தின் நாடாளுமன்றத்தில் பல ஆண்டுகள் வரை ஒரு நியமன உறுப்பினராக இருந்தவருமான பனாரஸி தாஸ் சதுர்வேதி என்பவருக்கு ஏறக்குறைய இந்தக் காலத்தில் பிரேம்சந்த் எழுதிய ஒரு கடிதம் அவருடைய மன அமைப்பு எத்தகையது என்பதை நன்கு காட்டுகிறது:

"எனக்கு வாழ்க்கையில் பெரிய அபிலாஷைகள் எதுவும் கிடையாது. இப்போது என் ஒரே அபிலாஷை இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் நாம் வெற்றி பெற வேண்டுமென்பதுதான். நான் என்றுமே பொருளுக்கோ புகழுக்கோ ஏங்கியதில்லை. வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்குப் போதிய அளவு எனக்குக் கிடைத்துவிடுகிறது. அதற்கு

nbt.india
एकः सूते सकलम्

with this problem & have only such members as believed in a common language. It shall have brought out a magazine in a common language in different scripts. It would have been a real service. At present its activities are communal and it has failed to justify its existence.

Certainly Hindustani is not a literary language in form and magnificence & grandeur. Literary language is supposed to be something apart from the spoken language. I believe in our literary expression coming as near as possible to spoken speech. At least in drama, story & novel we can write in popular language, including biography and travel, and these branches comprise three fourths of literature & that which really matters. Your science & philosophy may be written in Sanskrit or Prakrit. I don't care. As Gasonstle Jarey says "to drag Hindi to its ancient moorings is the vain effort to turn the river's flow to its source."

About the books I have asked my son to give you an account with whom he deposited the books. You may not be aware, my both children are at Kayastha Pathshala Intermediate School and lodging in the same building as Hindustani Academy. But they are shy extremely which they seem to have inherited from me supposing I am their father. His name is Sripat Rai. If you can send for him and ask an explanation he will tell you what became of the books.

Lekhak Sangha. Its only fruitful activity is in my opinion cooperative publication, so that every author contributing to its membership may be assured a royalty of 30 to 40%. The Hindi market is so dull and authors are so anxious to get their books published that they will come to any compromise with the publishers. If they stick to their terms & publishers refuse to publish their books, the poor fellow will be nowhere. The analogy is that

பிரேம்சந்த் ஆங்கிலத்தில் எழுதிய கையெழுத்துப்பிரதி

nbt.india
एकः सूते सकलम्



nbt.india
एक: सूत्रे सकलम्

பிரேம்சந்த் இந்தியில் எழுதிய கையெழுத்துப்பிரதி

மேல் காரும் பங்களாவும் என்னைக் கவரவில்லை. ஒருசில உயர்தர நூல்கள் எழுத வேண்டுமென்ற ஆவல் எனக்கு இருப்பது உண்மைதான். ஆனால் குறிக்கோள் என்னமோ சுயராஜ்ஜியத்திற்கான போராட்டத்தில் நாம் வெற்றி பெற வேண்டும் என்பதே. என் இரண்டு பிள்ளைகள் விஷயத்தில்கூட நான் ஏதும் பெரிய மனக்கோட்டை கட்டவில்லை. அவர்கள் நாணயமாகவும், உண்மையானவர்களாகவும், உறுதியில் தளராதவர்களாகவும் இருந்தால் எனக்குப் போதும். என் மக்கள் அதிகப்படி சுகங்களில் உழல்வதோ பணத்தாசை பிடித்து அலைவதோ அதிகாரத்திற்கு முன் கூழைக்கும்பிடு போடுவதோ எனக்கு வெறுப்பைத்தான் தரும். அதற்காக நிம்மதியாய் ஓய்வாக இருந்து விடுகிற வாழ்வும் எனக்கு வேண்டாம். நான் என் இலக்கியத்துக்காகவும் என் நாட்டுக்காகவும் எப்போதும் ஏதாவது செய்து கொண்டே இருக்க விரும்புகிறேன். என் தேவைகளைப் பொறுத்தமட்டில் நான் கேட்ப தெல்லாம் சாதாரண சோறு, கறி, அத்துடன் கொஞ்சம் வெண்ணெய், மிக எளிதாக ஏதோ இரண்டு உடைகள், இவ்வளவுதான்.”

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, யோனே நொகூசி என்ற ஜப்பானியக் கவிஞரைச் சந்திக்க பிரேம்சந்த் கல்கத்தாவுக்கு வரவேண்டுமென்று பனாரஸிதாஸ் அழைப்பு விடுத்தார். அழைப்பை மறுதலித்து அவர் எழுதிய மற்றொரு கடிதத்தில் தம் அக உலகை இன்னும் சிறிது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்:

“உலகில் பெரிய மனம் படைத்தவர்கள் பலர் உண்டு. ஆனால், அவர்களில் உண்மையிலேயே சிறந்தவர்கள் யார், போலிகள் யார் என்று தரம் பிரித்து அறிய மிகவும் திறமை வேண்டும். ஒரு சிறந்த மனிதன் பணத்தில் புரண்டு கொண்டு இருப்பதை என்னால் கற்பனையே செய்ய முடியவில்லை. ஒருவன் பணக்காரன் என்றதுமே அதன்பின் அவன் கலையைப் பற்றியும், அறிவைப் பற்றியும் பிரமாதமாகப் பேசும் பேச்சு எதுவும் எனக்கு ரசிப்பது இல்லை. ஏழையைப் பணக்காரன் சுரண்டுகிற அடிப்படையில் நிற்கும் இன்றைய சமூக அமைப்புக்குப் பணிந்து விட்டவனாகவே அவனை நான் காணத் தொடங்கி விடுகிறேன். எனது இந்த மனப்பான்மைக்கு ஒருவேளை நான் வாழ்வில் தோல்வியடைந்ததே காரணமாய் இருக்கலாம். வங்கியில் கொழுத்த பணமுள்ள கணக்கு வைத்திருந்தால் நானும் பிறரைப் போல் பண மோகத்தை மீற முடியாதவனாக இருந்திருப்பேனோ என்னமோ! ஆனால் நான் ஏழையாக இருப்பது இயற்கையும் விதியும்

nbt.india एकः सूते सकलम्

பிரேம்சந்த் - 1925

பிரேம்சந்த் கட்டிய வீடு

nbt.india

nbt.india
एक: सूत्र संकलन

எனக்குச் செய்த பேருபகாரம். இதைக் குறித்து நான் மகிழ்வடைகிறேன். இது எனக்கு ஆத்ம சாந்தி அளிக்கிறது.”

இந்த ஆத்ம சாந்தி அவருக்கு நிறையவே இருந்தது. எழுத்து வேலை ஒரே சீராய்த் தொடர்ந்து கொண்டிருந்தது. ‘கர்மபூமி’ என்ற நாவலுக்குப் பிறகு ‘கோதான்’ (கோதானம்) எழுதலானார். பல சிறுகதைகளும் விடாமல் எழுதினார். இவற்றைத் தவிர அவரது இரண்டு பத்திரிகைகள் வேறு இருந்தன. ஆங்கிலேயர்களை ஓய்ச்சல் ஒழிவின்றித் தாக்கிக் கொண்டிருந்ததும் சாமானியத் திருப்தி அல்ல. அது பேரானந்தம்.

இத்தனை இருந்தபோதிலும் பொருளாதாரம் என்பதென்னமோ வேறு விஷயம். அதன் விதிகளே தனி. அவற்றுக்கு ஒரு மனிதனின் ஆத்ம சாந்தியையோ தன்னுள் அவன் சுகமாய் இருப்பதாக உணர்வதையோ பற்றி அக்கறையில்லை. பணம் ஒன்றோடுதான் அவற்றுக்குச் சம்பந்தம். பணமோ பிரேம்சந்திடம் அறவே கிடையாது. அவருடைய இரண்டு பத்திரிகைகளினாலும் பெருத்த கடன் ஏறிவிட்டது. கடனாளியின் சக்தியோடு ஒப்பிட்டால் அந்தக் கடன் பெரியதுதான். இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் பம்பாயிலுள்ள அஜந்தா ஸினிடோனைச் சேர்ந்த மோகன் பவனானி என்பவரிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. திரைப்பட உலகுக்குப் போவது பற்றி அவர் எச்சரிக்கை கொண்டு தயங்கினார். ஆனால் அந்தச் சமயத்தில் வேறு வழியில்லை. கடன்காரர்கள் நெருக்கினார்கள். பணத்துக்கு எப்படியும் வழி செய்தாக வேண்டும். ஆகவே, மனமில்லாமலேயே அவர் பவனானியுடன் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஆனால் அவர் சந்தேகித்தது போலவே அந்த உலகில் ஒட்ட முடியாமல் அவர் ஓர் அன்னியராகத்தான் இருந்தார். நாவலாசிரியர் ஜைனேந்திர குமாருக்கு அவர் எழுதினார்.

“...இங்கு வந்ததில் என் நோக்கங்கள் எதுவுமே ஈடேறவில்லை. தயாரிப்பாளர்கள் தமக்குப் பழக்கப்பட்ட வகையான கதைகளிலிருந்து ஓர் இம்மிகூட நகரத் தயாராயில்லை. இவர்களைப் பொறுத்தவரையில் ஆபாசம் என்பது மக்களை மகிழ்விக்கும் சாதனமாய் இருக்கிறது.”

ஹைதராபாத்தில் உள்ள திரு கோரி என்பவருக்கு எழுதினார்.

“...திரைப்படங்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பவர்கள் துர திருஷ்டவசமாக அதை ஒரு தொழிலாகக் கருதுகிறார்கள். மக்களின் ரசனையை மேம்படுத்துவதில் தொழிலுக்கு என்ன சம்பந்தம்? தொழிலுக்கு எது ஒன்றையும் சுய லாபத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ள

மட்டும்தான் தெரியும். இங்கு அது மனிதனின் மிகப் புனிதமான உணர்ச்சிகளை அப்படித்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது".

பிரேம்சந்துக்கு நிலைமை வெறுத்துப் போய்விட்டது. ஓராண்டு முடிவதற்குள்ளாகவே மூட்டை கட்டிவிட நிச்சயித்தார். பவனானி இன்னும் ஓர் ஆண்டு காலமாவது இருக்கும்படி வற்புறுத்தியபோதிலும் அவர் பிடிவாதம் தளரவில்லை. கிராமம்தான் உண்மையில் அவருக்கு உரிய இடம். அங்கு திரும்பிப்போக அவர் மனம் வைத்துவிட்டார். அண்மையில் இங்கிலாந்தில் இருந்து திரும்பியிருந்த ஹிமா(ம்)சு ராய் அப்போது அவரை ஒப்பந்தம் செய்து விட முயன்றபோதிலும் பிரேம்சந்த் மரியாதையாக, ஆனால் உறுதியாக, மறுத்துவிட்டார். சினிமாவின் கவர்ச்சி உலகிலிருந்து தம் கிராமத்துக்குத் திரும்பியே தீரவேண்டுமென்று அவர் விரும்பினார். அப்படித்தான் ஜைனேந்திரருக்கு எழுதினார்.

"என் நாவலின் (கோதான்) கடைசிப் பகுதியை எழுத வேண்டியிருக்கிறது. ஆனால் இங்கு என்னால் அது முடியவில்லை. இப்போது என் ஒரே விருப்பம் பம்பாய்க்கு விடை கூறிவிட்டு என் பழைய இடத்துக்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்பதுதான். அங்கு பணம் காசு இல்லாமலிருக்கலாம். ஆனால் நிச்சயம் இங்கு இருப்பதை விடத் திருப்தியாக இருக்கிறது. இங்கு நான் என் வாழ்வை வீணாக்கிக் கொண்டிருப்பதாகவே எப்போதும் தோன்றுகிறது".

ஆகவே அவர் 1935ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் தேதி பம்பாயிலிருந்து கிளம்பிவிட்டார்.

nbt.india
एकः सूते सकलम्

6

பம்பாயில் தங்கியிருந்த பத்து மாதங்கள் அவரை உருக்குலைத்து விட்டிருந்தன. காசிக்கு வந்து சேர்ந்த போது அவர் ஒரு நோயாளி. ஈரல் ஏற்கனவே சீர்கெட்டிருந்தது. எனினும் அவருக்கு ஓய்வு இல்லை. ‘கோதான்’ பற்றிய சிந்தனையே மனத்தில் அழுத்தியது. இது அவர் படைப்புகளுள் மகுடமாய் விளங்கப் போவதும், அவர் எழுதிய நாவல்கள் அனைத்திலும் அவரை உலகப் புகழுக்கு உரியவராக ஆக்குவதுமான நாவல். (இந்த நூல் ஆங்கிலத்தில் ‘தி கிஃப்ட் ஆப் எ கௌ’ என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் சமூக கலாசார நிறுவனத்தின் ‘ஆசிய இலக்கிய வரிசை’யில் வெளியிடப்பட்டுள்ளது).

நாணயமான, பழிபாவத்திற்கு அஞ்சுகிற, விவசாயியின் துன்பங் களையும் மரணத்தையும் சொல்லும் கதைதான் கோதான். அவனுடைய கதி, கிராமப் புறங்களில் ஏழையைப் பணக்காரன் சுரண்டுகிற சுரண்டல் முறை முழுவதையுமே கதைப் போக்கில் வெட்ட வெளிச்சமாக்குகிறது. இந்த நாவல் மிகுந்த கருணை உணர்வோடும், கிராமச் சுரண்டல்காரக் கும்பலின்பால் பொங்குகிற ஊமைச் சீற்றமாயினும் பெரும் சீற்றத்தோடும் எழுதப்பட்டிருக்கிறது. பிரேம்சந்த் பல இன்னல்களுக்கு இடையே அதை 1936ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒருவாறு எழுதி முடித்தார். தம் வழக்கப்படி உடனேயே ‘மங்கல்ஸூத்ர’ (மங்கல நாண்) என்ற தலைப்பில் இன்னொரு நாவலை எழுத ஆரம்பித்துவிட்டார். ஏழையாயினும் புகழ் பெற்றவனான ஓர் எழுத்தாளனைக் கதாநாயகனாகக் கொண்ட இந்த நாவலில் சுயசரிதைத் தன்மை தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் கடைசியில் அந்த நாவல் எப்படி உருப்பெற்றிருக்கும் என்று நமக்குத் தெரியாது. ஏனென்றால் நாவலை முடிப்பதற்குள் அவர் உலக வாழ்விலிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

இங்கிலாந்திலிருந்த சில இளம் இந்திய எழுத்தாளர்கள் 1935ஆம் ஆண்டில் ‘இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம்’ என்ற அமைப்பைத் துவக்கியிருந்தார்கள். இவர்களில் முல்க் ராஜ் ஆனந்த், ஸஜ்ஜாத் ஜஹீர் ஆகியோரும் இருந்தனர். 1936 ஏப்ரலில் அவர்கள் தமது முதல் அகில இந்திய மாநாட்டை லக்னோவில் வைத்துக் கொள்வதாய் இருந்தார்கள். அதற்கு பிரேம்சந்த் தலைமை தாங்க வேண்டுமென்று விரும்பினார்கள். பிரேம்சந்த் உடனே ஒப்புக்கொண்டார். ஏனெனில் அந்த இயக்கத்தின் குறிக்கோள் என்னவென்பதை அவர் அறிவார்.

nbt.india

அந்த எழுத்தாளர் நிறுவனத்தைப் பற்றிய தகவல் முதலில் இங்கிலாந்திலிருந்து வந்த போது தம் பத்திரிகையில் அதை வரவேற்றுத் தலையங்கம்கூட எழுதியிருந்தார். மாநாட்டில் அவர் ஆற்றிய எழுச்சியூட்டும் உரை அந்தப் புதிய இயக்கத்துக்கு அதன்பின் பல ஆண்டுகள் வரையில் மூலாதாரமாக அமைந்தது. மக்களின் சமூக நலனுக்காகவும் அற நலனுக்காகவும் பாடுபடும் ஓர் இலக்கியத்தையே அவர் வாழ்நாள் முழுவதும் குறிக்கோளாய்க் கொண்டிருந்ததால் அந்த மரபைப் பேணிப் பாதுகாக்க ஒரு புதிய எழுத்தாளர் குழாம் தோன்றியிருந்ததில் அவர் மகிழ்ச்சியடைந்தது இயற்கையே.

அவர் மனத்தைக் குடைந்து கொண்டிருந்த இன்னொரு பெரிய கேள்வி, மொழியைப் பற்றியதாகும். இந்தியும், உருதுவும் ஒன்றுக்கொன்று இடம் கொடாத தனித்தனியான இரு தூய மொழிகளாய்த் திட்டவட்டமாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. இது இரண்டுக்குமே கேடு விளைவிப்பதாகும் என்று அவர் உறுதியாய் நம்பினார். இந்த இரண்டு மொழிகளிலுமே சந்தேகத்துக்கு இடமின்றிப் பெரும் எழுத்தாளராய்

பிரேம்சந்தின் உடைமைகள் சில



பிரேம்சந்த் பயன்படுத்திவந்த பெட்டி

விளங்கியதால் தாம் அந்த இரண்டு மொழிகளுக்கிடையே பாலமாக அமைய முடியுமென்றும், என்றோ ஒருநாள் அவை ஒன்று கலப்பதற்கான அடிப்படையைத் தம்மால் உருவாக்க முடியுமென்றும் அவர் வெகுளித்தனமாய் எண்ணினார். இந்தக் கருத்து அவர் மனத்தை முழுவதும் ஆட்கொண்டு அவர் வாழ்வின் கடைசிப் பெரும் லட்சியமாய் ஆனது.

இதன் தொடர்பாக அவர் லக்னோவில் இருந்து லாகூருக்கும் அங்கிருந்து நாக்பூருக்குமாக மேலும் கீழுமாய் அலைந்தார். நாக்பூரில் காந்தியின் தலைமையில் பொது ஹிந்துஸ்தானி மொழியைப் பற்றி ஒரு கூட்டம் நடத்தப்படுவதாக இருந்தது. ஆனால் விரைவிலேயே அவரது கனவு என்றுமே நனவாக முடியாதென்பதும், அவர் கானல் நீரைத் துரத்தி ஓடிக்கொண்டிருக்கிறார் என்பதும் தெளிவாகியது. இரண்டு தரப்பிலுமே தூய மொழி வாதிகள் அந்தக் கனவைக் கொன்றார்கள். இது பிரேம்சந்துக்கு மிகுந்த துயரமளித்ததில் வியப்பில்லை.

nbt.india
एक: सूत्र संवाद

இதே அளவு தீவிரமான வேறு விதத் துயரமொன்றும் அவருக்குக் காத்திருந்தது. தாம் மிக அருமையாய்ப் போற்றியிருந்த ஒரு லட்சியத்தை அவர் துறக்க வேண்டியிருந்தது. ஏறக்குறைய இருபது ஆண்டுகளாய் சில்லறை மாற்றங்களுடன் அந்த லட்சியத்தை விடாது பற்றியிருந்தார். இப்போது, வாழ்வின் இறுதி நாட்களில், பணக்கார வர்க்கம் தன் செல்வத்தை மனமாற்றத்தால் தானே முன்வந்து விட்டுக் கொடுக்குமென்று எதிர்பார்ப்பது சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்ளுமென்று எதிர்பார்ப்பதைப் போலத்தான் என்பதை அவர் புரிந்து கொண்டு விட்டார். இதை ஏற்றுக் கொள்வது அவருக்கு எத்தனை வேதனையளித்தது என்பது ‘மங்கல நாண்’ என்ற அவருடைய முற்றுப்பெறாத கடைசி நாவலில் வரும் இந்தச் சொற்களிலிருந்து தெளிவாகிறது.

“ஆம், உலகில் தேவர்கள் இருந்திருக்கிறார்கள். இனியும் இருப்பார்கள். அவர்கள் இவ்வுலகம் இன்னமும் மதம், அறம் இவற்றோடு இணைந்து செல்வதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தம்மைப் பலியாக்கிக்கொண்டு திரும்பிச் செல்கிறார்கள். ஆனால் அவர்களைத் தேவர்களென்று சொல்வானேன்? தம்மிலேயே மூழ்கியிருக்கும் கோழைகளென்றே சொல்லலாம். எவனொருவன் நியாயத்தைக் காக்கப் போராடி அதற்காக உயிர்த் தியாகம் செய்கிறானோ அவனே தேவன் எனப்படுவான். அவன் உண்மை நிலை தெரிந்திருந்தும் தெரியாதவன் போல் நடித்தால் அறநெறி தவறியவனாகிறான். ஆனால் உலகின் இந்தத் தீய அமைப்பு அவன் மனத்தைத் துன்புறுத்தக்கூட இல்லை என்றால் அப்போது அவன் வெறும் குருட்டு மூடன்தான், தேவனல்ல. இங்கு தேவர்களுக்கு இடமும் கிடையாது. இந்தத் தேவர்கள்தான் விதி என்றும் கடவுள் என்றும் கடவுள் வழிபாடு என்றும் பொய்க்கதைகள் கட்டி உலகில் இந்தத் தீமையை நிலையாக்கி விட்டார்கள். (அவர்கள் இருந்திருக்காவிட்டால்) மனிதன் இதற்குள் இந்தப் பொய்களையும் ஒருகால் இந்தச் சமுதாயத்தையுமே கூட அழித்து முடித்திருப்பான். இப்படியே வாழ்ந்து கொண்டிருப்பதைவிட அது கூட எத்தனையோ மேல்தான். இல்லை, நாம் மனிதர்களிடையே மனிதர்களாய்த்தான் இருந்தாக வேண்டும். வனவிலங்குகளிடையே வாழ்வதால் பாதுகாப்புக்கு நம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அவை நம்மைக் கிழித்துப்போட விடுவது முட்டாள்தனமே தவிர தேவத்தன்மையல்ல”.

1936ஆம் ஆண்டின் கோடைக்காலம். பிரேம்சந்த் தமது ‘ஹிந்துஸ்தானி’

nbt.india
एकः सूते सकलम्

நோய்வாய்ப்பட்ட நிலையில்

nbt.india
एकः सूते सकलम्

பிரசாரத்திலிருந்து திரும்பியிருக்கிறார். மிகவும் களைப்புற்றிருந்த போதிலும் இன்னமும் அவருக்கு ஓய்வு இல்லை. பழைய நாட்களைப் போலவே அடிக்கடி நள்ளிரவில் எழுந்து, ஏதோ ஓர் உக்கிரமான படைப்பு வேகம் தம்மை ஆட்கொண்டிருப்பது போல் எழுதுகிறார். ஒருவேளை, தாம் பயணத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதான முன்சூசகமாய் அது இருந்திருக்கலாம். அதனால், கஷ்டங்கள் நிறைந்த ஒரு வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றி ஒட்டு மொத்தமாகச் சொல்வதற்கு இருந்த எல்லாவற்றையும் இன்னும் நேரமிருக்கும்போதே சொல்லித் தீர்த்துவிட வேண்டும் என்று எண்ணியிருக்கலாம். அப்போது எழுதிக்கொண்டிருந்த நாவலைத் தவிர 'கஃபன்' (சவத்துணி) என்ற சிறுகதையும் 'மஹாஜனி ஸப்யதா' (முதலாளித்துவ நாகரிகம்) என்ற கசப்பான கட்டுரையும் அவர் இந்தக் காலகட்டத்தில் எழுதினார்.

'கஃபன்' அவர் எழுதிய சிறந்த சிறுகதைகள் யாவினும் தலைசிறந்தது என்றே சொல்லலாம். தீராத பசியாலும் வறுமையாலும் மனிதன் எப்படி மனிதத் தன்மையையே இழந்துவிடுகிறான் என்பதைச் சித்திரிக்கும் கதை இது. 'மஹாஜனி ஸப்யதா'வில் அவர் முதலாளித்துவத்தைக் கண்டனம் செய்து சமதர்மவாதத்துக்கு நல்வரவு கூறுகிறார். இவையும் அந்த முடிவுறாத நாவலும் அந்த எழுத்தாளர் தாம் நேசித்த அருமை நாட்டு மக்களுக்குக் கடைசியாக விட்டுச்சென்ற உயிலும் மரண சாஸனமும் ஆகும்.

பலவீனப்பட்ட உடலால் அந்த உழைப்பை அதற்கு மேலும் தாங்கமுடியவில்லை. அவர் நோய்வாய்ப்பட்டார். 1936ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி ரத்த வாந்தி எடுத்தார். இரைப்பை ரணம் (காஸ்டிரிக் அல்ஸர்) என்று வைத்தியர்கள் சொன்னார்கள். பல மருத்துவர்கள் பல மருத்துவ முறைகளைக் கையாண்டு பார்த்தும் பயனில்லை. அவருடைய உடல்நிலை நாளுக்கு நாள் சீர்கெட்டது. முதலில் இரைப்பை ரணமென்று சொன்னது இப்போது மகோதரம் என்னும் ஒரு கடுமையான ஈரல் நோய் (cirrhosis of the liver) என்றும் தெரியவந்தது. இந்த மருத்துவச் சொற்கள் எல்லாம் அவருக்கோ அவர் குடும்பத்தில் மற்றவர்களுக்கோ ஏதும் புரியவில்லை. நோவு அதிகம் இருந்தது ஒன்றுதான் புரிந்தது.

தாம் இறக்கப்போவது அவருக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. தம்முள் அவர் அமைதி கண்டுவிட்டதால் கடவுளோ பூசாரியோ அவருக்குத் தேவைப்

nbt.india
एकः सूते सकलम्

படவில்லை. தம் வாழ்வின் ஒவ்வொரு விநாடியையும் அவர் படைப்பு மிக்கதாய் அர்த்தத்தோடு வாழ்ந்திருந்தார். இதற்கு மேல் என்ன வேண்டும்? இப்போது விடைபெறும் தருணம் வந்துவிட்டது. குடும்பத்தார் அவர் இல்லாமையை உணர்வார்களென்பது உண்மைதான். ஆனால் வாழ்க்கை யாருக்காக நிற்கிறது? இப்போது அவர் வெறும் எலும்புக்கூடாகியிருந்தார். கன்னங்கள் வெளுத்து

பிரேம்சந்த் எழுதிய ‘ஈத்கா’ எனும் புகழ்பெற்ற சிறுகதையின் ஒரு காட்சி

ஒட்டிப் போயிருந்தன. நோவும் அதிகமிருந்தது. ஆனால் அவருடைய அமைதியும் இயல்பான உற்சாகமும் அவரை விட்டு நீங்கவில்லை. ஆகவே 1936ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதியன்று முடிவு வந்தபோது எல்லாருக்குமே அதிர்ச்சியாயிருந்தது. கிராமத்திலிருந்து நண்பர்களும் உறவினர்களுமாய்ச் சாவுக்கு வந்தவர்கள் ஒரு டஜன் பேர்கூட இருக்கமாட்டார்கள்.

எளிய தொடக்கத்தைப் போல் முடிவும் எளிமையாகவே இருந்தது.

nbt.india
एकः सूते सकलम्

nbt.india

एकः सूते सकलम्

Lasertypeset at Capital Creations, New Delhi and
printed at Infinity Advertising Services, Faridabad